பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 18 ஞாயிற்றுக்கிழமை 31.03.2024 கதிர் 145

## இந்திய - இலங்கை பொருளாதார திட்ட முன்னேற்ற மீளாய்வு கூட்டம்

இந்திய - இலங்கை இடையிலானஇருதரப்புப் பொருளாதாரத் திட்டங்களின்முன்னேற்றத்தை மீளாய்வுசெய்வதற்கான சந்திப்பொன்று புதுடில்லியில் நடைபெற்றது.

இந்தியவெளியுறவுச் செயலர் வினய் குவாத்ராவின் அழைப்பின் பேரில் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதிபணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க உள்ளிட்ட இலங்கையின் உயர் மட்டக் குழுவின் பங்கேற்புடன் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இதன்போது சாகல ரத்நாயக்க உள்ளிட்ட குழுவினருக்கு இந்திய வெளிவிவகாரச்செயலாளர் சிறப்பு வரவேற்பளித்ததுடன், இலங்கையின் பொருளாதார வளர்ச்சி சாதகமான நிலைக்குத்திரும்பி வருவதால், ☞2

## இலங்கை வரும் பிரிட்டிஷ் மக்கள் அவதானமாக இருக்க அறிவுறுத்து

இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளும் பிரித்தானியப் பிரஜைகள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று மத்திய கிழக்கு, தெற்காசியா மற்றும் பொதுநலவாய நாடுகளுக்கானபிரிட்டன்அமைச்சர் தாரிக் அஹமட் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான பயண வழிகாட்டலை மாற்றியமைப்பதற்கான உத்தேசம்குறித்துபிரித்தானிய நாடாளுமன்றத்தில் ☞8

## பெண்களுக்கு எதிரான வன்முறை சமூக ஊடகங்களில் அதிகரிப்பு

சமூக ஊடகங்களில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துள்ளதாக பொலிஸ் கணினி குற்றப்பிரிவுதெரிவித்துள்ளது.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் சமூக ஊடகங்கள்ஊடாகஇடம்பெற்ற குற்றங்கள் தொடர்பில் 1500 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இவற்றில்பெண்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்களே அதிகளவில் பதிவாகியுள்ளன. ☞2

## இது ரகசியம் அல்ல!

மொட்டுக் கட்சியின் பிரதம அமைப்பாளராகநாமல்ராஜபக்சவை நியமித்தது குறித்து ராஜபக்ச குடும்பத்திற்குள் சலசலப்புக்கள் ஏற்பட்டிருக்கின்றன. கட்சியிலோ ஆட்சியிலோ இப்போதைக்கு ராஜபக்சக்கள் யாரும் பொறுப்புக்களை ஏற்காமல் இருப்பதே உசிதம் என்று குடும்பத்தில் மூத்தவரான சமல் ராஜபக்ச அறிவுறுத்தியிருக்கிறார்.

பஸில் கட்சியின் அமைப்பாளர் பதவியை ஏற்கவில்லை என்றால் அந்த இடத்திற்கு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கஉள்ளிட்டசிலரில்யாராவது ஒருவரை நியமிக்கலாம்என்றுஅவர் யோசனையும் முன்வைத்து காய் நகர்த்தி வந்துள்ளார். கடைசிவரை அவரது யோசனையை ஏற்பது போல இருந்துவிட்டு, இறுதியில் செயற்குழுக் கூட்டத்தில் நாமலை அமைப்பாளராக நியமித்தமையே குடும்பத்திற்குள் சலசலப்பு ஏற்படக் காரணம் என்று கூறப்படுகின்றது.

ராஜபக்ச குடும்பத்தின் அரசியல் எதிர்காலத்தைக் கருத்தில்கொண்டு தற்போதைக்குப் பொறுப்புக்களைத் தவிர்ப்பதே நல்லது என்பதே சமலின் கருத்தாக இருந்தது. ☞2

# பொது வேட்பாளராகுவதற்கு விஜயதாச ராஜபக்சவும் கண்

### நாட்டுக்காக எந்தச் சவாலையும் ஏற்கத் தயார் என அறிவிப்பு



மகாநாயக்கர்களும், இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ மதத் தலைவர்களும் ஜனாதிபதித் தேர்தலில் தன்னைப் பொது வேட்பாளராகப் போட்டியிடுமாறு கேட்கிறார்கள் என்றும் நாட்டுக்காக எந்தச்சவாலையும் ஏற்கத் தயாராக இருக்கின்றேன் என்றும் ☞2

## சு.கட்சியில் திடீரென அதிரடி மாற்றங்கள்

### 3 பேரைத் தூக்கியது கட்சி

மஹிந்த அமரவீர, லசந்த அழகியவண்ண மற்றும் துமிந்த திசாநாயக்க ஆகியோர் சிறீ லங்கா சுதந்திரக் கட்சியில் இதுவரை வகித்த பதவிகளில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு கூட்டம் கட்சியின் நிறைவேற்றுக்குழு மற்றும் தொகுதி மற்றும் மாவட்ட அமைப்பாளர்களுக்கான கூட்டம் ஆகியன நேற்று நடைபெற்றன. இதன்போதேஅவர்களைநீக்குவதற்காக கொண்டுவரப்பட்ட பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இத்துடன், துமிந்த திசாநாயக்க இதுவரை வகித்த சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவி மஹியங்கனை தொகுதி அமைப்பாளர் கே.பி குணவர்தனவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கட்சியில் லசந்த அழகியவண்ண இதுவரைவகித்தகட்சியின்பொருளாளர் பதவிக்கு ஹெக்டர் பெத்மகே நியமிக்கப்பட்டுள்ளார்.

மஹிந்த அமரவீர இதுவரை வகித்த சிரேஷ்ட உபதவிசாளர் பதவிக்கு ☞2

## பிரகடனம் கையளிப்பு

இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் விதிவிடப்பிரதிநிதி மார்க் அண்ட்ரே பிராஞ் மற்றும் புத்தசாசன, மத மற்றும் கலாசார விவகாரங்களுக்கான அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க ஆகியோரிடத்தில் இமயமலைப் பிரகடனம் உத்தியோக பூர்வமாக கையளிக்கப்பட்டுள்ளது. ☞2

## பொறுப்புக்கூறலை இலங்கை உடன் நிறைவேற்ற வேண்டும்

### சர்வதேச மன்னிப்புச் சபை மீண்டும் வலியுறுத்து

இலங்கையைப் பொறுத்தமட்டில்வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பில்உடனடியாகப் பொறுப்புக்கூறல் நிலை நாட்டப் படவேண்டும் என்பதுடன், இவ்வாறான சம்பவங்கள் மீண்டும் நிகழாதிருப்பதை உறுதி செய்யவேண்டியது அவசியம்என்றுசர்வதேச மன்னிப்புச்சபைமீண்டும் வலியுறுத்தியுள்ளது.

'தெற்காசியப் பிராந்தியத்தில்வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்களின் தடங்கள்' எனும் தலைப்பில் சர்வதேச மன்னிப்புச்சபையினால் வெளியிடப்பட்டிருக்கும் தரவு அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: ,

இலங்கையின் கறைபடிந்த வலிந்து காணாமலாக்கப்படல் வரலாறு மனித உரிமைகள் வலுவாகப் புறந்தள்ளப்படுவதைக் காண்பிக்கின்றது. ☞9

## வெடுக்குநாறி ஆலயச் சம்பவம் நல்லிணக்கத்திற்கு பாதிப்பாம்

### இமயமலைப் பிரகடனக்காரர்கள் தெரிவிப்பு

வெடுக்குநாறி உள்ளிட்ட சம்பவங்களால் நல்லிணக்க முயற்சிகள் பாதிக்கப்படுவதாக சிறந்த இலங்கைக்கான மன்றம் மற்றும் உலகத் தமிழர் பேரவை ஆகியன கவலை வெளியிட்டுள்ளன.

இமயமலைப் பிரடகன வெளியீட்டாளர்களான இந்த அமைப்பினர் வெளியிட்டுள்ள ஊடக அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையின் வடக்கே உள்ள வெடுக்குநாறி ஆதிசிவன் கோவிலில் நடைபெற்ற மகாசிவராத்திரிநிகழ்வின் போதுநடந்தஅசம்பாவித சம்பவங்களால், சிறந்த இலங்கைக்கான சங்கமும்மற்றும்உலகத் தமிழர் பேரவையும் கவலை ☞2

## வவுனியாவில் போராட்டம்

வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால்சர்வதேச நீதி கோரி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா பழைய பேருந்துநிலையத்துக்கு முன்பாகநேற்றுக்காலை 10 மணிக்கு போராட்டம் தொடங்கியது. ஒரு சில மணிநேரத்திற்குத் தொடர்ந்தது.

''குற்றமிழைத்த நாட்டில் எமக்கான நீதி கிடைக்கப்பெறாது. இதனால் சர்வதேச நீதி கோரி நாம் போராட்டத்தினை முன்னெடுத்து வருகிறோம். எனவே சர்வதேசம் இனியும் கண்மூடித்தனமாக இருக்காமல் எமக்கான நீதியை பெற்றுத்தர வேண்டும். ☞8

## தமிழரின் சுயநிர்ணய உரிமையை அமெரிக்கா ஆதரிக்க வேண்டும்

### பொது வாக்கெடுப்பை ஆதரிக்கவும் வலியுறுத்தி இராஜாங்கச் செயலருக்கு எம்.பிக்கள் கடிதம்

இலங்கையில் ஐ.நாவின் உண்மை மற்றும் நல்லிணக்க முயற்சிகள்தோல்வியில் முடிவடைந்துள்ளன. ஆகவே ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை ஆதரிக்க வேண்டும். அத்துடன் தீர்வுக்கான பொது வாக்கெடுப்பை ஆதரிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கின்றோம் என்று அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள்இராஜாங்கச்செயலாளர் அன்டனி பிளிங்கனுக்கு அனுப்பியகடிதத்தில்வலியுறுத்தியுள்ளனர்.

அமெரிக்ககாங்கிரஸ் உறுப்பினர்கள் டொனால்ட் ஜி டேவிஸ் வைலிநிக்கலஸ்ஜோன் கொதைமர்ஜெப்ஜக்சன் சமர்லீ டானி கே டேவிஸ், சூசன் வைல்ட், ராஜாகிருஸ்ணமூர்த்தி, ஜமால்போமன்கேவ்வாஸ் குவாஸ் ஆகியோரே இவ்வாறு வலியுறுத்தியுள்ளனர்.

அவர்கள் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

1. ஈழத்தமிழர்களின் சுயநிர்ணயஉரிமையை ஆதரித்து, மற்றும் சர்வதேசசட்டங்களின்படி அவர்களுக்குள்ள உரிமைகளின் அடிப்படையில்,பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, உலகளாவில் ஏற்றுக்கொள் எப்பட்ட ஜனநாயக வழி முறையான பொதுவாக்கெடுப்புமுறையை ☞2

## இந்தியாவிற்கு பாலம் கட்டுவது குறித்துப் பேச சாகல ரத்நாயக்கவுக்கு இருக்கும் தகுதி என்ன?

### ஜே.வி.பி. யாழ். மாவட்ட அமைப்பாளர் கேள்வி

இந்தியாவுடன் பாலம்அமைப்பதற்கான பேச்சுக்களில் பங்கேற்பதற்கு சாகல ரத்நாயக்கவுக்கு உள்ளதார்மீக அந்தஸ்து என்னவென்று தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரன் கேள்வி எழுப்பியுள்ளார். ☞2

காலைக்கதிர் Kalaikkathir

# தேர்தல் திகதிகளை ஆளும் தரப்பு ஒருபோதும் தீர்மானிக்க முடியாது

## சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

தேர்தலுக்கானதிகதிகளைஆளும்தரப்புத்தீர்மானிக்க முடியாது என்று இலங்கைத் தமிழரசுக்கட்சியின் யாழ்.மாவட்டபாராளுமன்றஉறுப்பினர்எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய நாடாளுமன்றமானது மக்கள் ஆணையை இழந்ததொன்றாகும். அந்த வகையில் முற்கூட்டியே தேர்தல் நடத்தப்பட்டிருக்கவேண்டும். ஆனால் அவ்வாறு நடைபெற்றிருக்கவில்லை.

தற்போது தேசிய தேர்தல்கள் இரண்டும் நெருக்கமாக வருகின்றநிலையில்ஜனாதிபதித்தேர்தலைமுற்கூட்டியே வைப்பது அல்லது நாடாளுமன்றத் தேர்தலை முற்கூட்டியே நடத்துவது என்ற விடயம் ஆளும் தரப்பு தீர்மானிப்பதாக இருக்கக்கூடாது.

ஆளும்தரப்போஅல்லதுஆட்சியைதக்கவைப்பதற்கு முயற்சிப்பவர்களோ தங்களுடைய சாதக நிலைமைகளை கணித்து தேர்தலை நடத்துவதற்கு முயற்சிக்கின்றமையானது பிழையன ஜனநாயக முறைமையாகும்.

அதனால் தான் தேர்தல்கள் குறித்த திகதியில் நடத்தப்படுவதை உலக நாடுகள் வழக்கமாகக் கொண்டிருக்கின்றன. அவ்வாறான நிலையில் இலங்கையில்தேர்தல்நடத்தப்படும்திகதியைஇன்றைய ஆட்சியாளர்கள் தீர்மானிக்க முடியாது.

அதுமட்டுமன்றி, தனியொரு அரசியல் கட்சியோ, அல்லது ஜனாதிபதியோ தேர்தல் திகதியை தீர்மானிக்க முடியாது. எம்மைப்பொறுத்தவரையில் தேசிய அரசியல் கட்சிகளுடன் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில்தேசியமக்கள்சக்தியும்வரும்வாரம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து சந்திக்கவிருப்பதாக கூறியுள்ளது. ஆகவே எம்மைச்சந்திப்பதற்கு விரும்புபவர்களை நாம் சந்திப்போம்.

அதேநேரம், ஜனாதிபதி வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டதன் பின்னர் உரிய சந்திப்புக்களை நடத்துவோம் என்றார்.

## இனி இது .....

ஆனால், கட்சியை இப்போதே பொறுப்பேற்று அடுத்தடுத்த தேர்தல்களுக்குத் தலைமை தாங்குவதன்மூலம்விரைவிலேயே நாட்டின் தலைவராகுவதற்கான வழித்தடத்தை நாமல் ஏற்படுத்திக்கொள்ளவேண்டும் என்பதுகட்சியின்பொதுச்செயலாளர் உட்படசிலதலைவர்களின்கருத்தாக இருக்கின்றது.

கடைசியில் அவர்களின் கருத்தே வெற்றிபெற்று நாமல் தேசிய அமைப்பாளராகப் பதவியேற்றுள்ளார். பதவி கிட்டிய பின்னர் பெரியப்பாவின் கருத்து, வருத்தம் பற்றியெல்லாம் நாமல் கவலைப்படவில்லை.கட்சிக்குள்ளும் அரசியலிலும் தன்னை நிலைநிறுத்திக்கொள்வதற்கான அரசியலில் தீவிரமாகக் குதித்துவிட்டார்.

ராஜபக்சக்களின் அரசியல் கோட்டையான அம்பாந்தோட்டையில் இருந்து அந்தப் பணியை அவர் தொடக்கியிருக்கிறார். நேற்று அங்கு அவரது ஏற்பாட்டில் கட்சியின் முதலாவது அரசியல் கூட்டம் இடம்பெற்றுள்ளது. 'அம்பாந்தோட்டையிலிருந்து போராட்டத்தை தொடங்குவோம்' என்ற தொனிப்பொருளில் அவர் இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார். கூட்டத்திற்குப் பெருமளவுமக்களைஅவரால்திரட்ட முடிந்திருப்பதாகவும் இதன் மூலம் கிராமங்களில் ராஜபக்சக்களுக்கு இன்னமும்மவுசு இருக்கிறது என்று அவர் நிரூபித்திருக்கிறார் என்றும் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

முதல் கூட்டத்தால் உற்சாக மடைந்திருக்கும்நாமல்இதுபோன்ற கூட்டங்களை நாடு முழுவதும் நடத்தி கட்சியை மறுசீரமைக்கும் பணிகளை வேகப்படுத்துவதற்குத் தீர்மானித்துள்ளார். அம்பாந் தோடடைக் கூட்டத்தில் பேசிய நாமல், நாம் எப்போதும் மக்களுடன் பங்கேற்று அரசியலில் ஈடுபட்ட அரசியல் சக்தி என்பதை தெளிவாக புரிந்துகொள்ளவேண்டும். எமக்கு எத்தகைய சவால்கள் வந்தாலும் நாம் உங்களையே (மக்களையே) நம்புகின்றோம்.

எமது வரலாற்றில் மனம் காயப்பட்டிருக்கலாம். மனம் வெறுப்படைந்திருக்கலாம். ஆனால் நாம் அனைவருக்கும் பொதுவான அழைப்பினை விடுகின்றோம். நாம் ஒன்றுபடுவோம். நாம் புதிய அரசியல்சக்திஎன்றவகையில்நவீன உலகத்துக்குதேவையானஅரசியல் சக்தியைக் கட்டியெழுப்புவோம்.

இந்த நாட்டை நேசிக்கும் அரசியல் சக்தியாக மாறுவதற்கான வேலைத்திட்டத்தினை நாம் முன்னெடுத்துள்ளோம். தற்போது 69இலட்சம் மக்களின் ஆணைக்கு உரிமையாளர்களாகப் பலர் இருக்கின்றார்கள். 69 இலட்சம் வாக்குகள்பலபக்கங்களிலும்பிரிந்து கிடக்கின்றன. அமர்ந்திருந்தாலும் அவர்கள் எனது தந்தையின் 69 இலட்சம் மக்கள் ஆணையையே பகிர்ந்து கொள்கிறார்கள். ஆகவே நான் அழைப்பு விடுகின்றேன். கைகளைக்கோர்த்துக்கொள்வோம். நாம்அம்பாந்தோட்டைமாவட்டத்தில் இருந்து போராட்டத்தினை ஆரம்பிப்போம்" என்று தெரிவித்தார்.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரிய நேரத்தில் அது தொடர்பா முடிடவுகள் எடுக்கப்படும் என்றும் நீதி அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்திற்கு நேற்று வந்திருந்த அவர், செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் சமகால நிலைமைகள் சம்பந்தமாகக் கட்சிக் கூட்டத்தில் உரையாற்றுவதற்காகவே வருகை தந்திருந்தேன். அந்த அடிப்படையில் யாப்புமாற்றம்சம்பந்தமாககட்சியில் பேசப்பட்டது. அது சம்பந்தமாக என்னால் கூற முடியாது. கட்சியின் அங்கத்தவர்களிடத்தில் தான் கோர வேண்டும்.

நான் சிறீமாவோ பண்டார நாயக்கவின் காலத்தில் இருந்து சுதந்திர கட்சியுடன் இணைந்து செயற்படுகின்றேன். ஆகவே சுதந்திரக் கட்சியுடன் நீண்ட அனுபவம் உள்ளது.

பொருத்தமான நேரத்தில் தீர்மானம் எடுக்கப்படும். கட்சியின் அங்கத்தவர்கள் தான் தீர்மானம் எடுக்கவுள்ளனர். அவர்கள் தீர்மானித்தால் நானும் தயாராகவே உள்ளேன். ஆனால் தற்போது அவசரப்பட வேண்டாம் என்றார்.

இதேவேளை, வெள்ளிக்கிழமை கண்டிக்குச்சென்றிருந்த அமைச்சர் கலாநிதி.விஜயதாசராஜபக்சஅஸ்கிரிய பீட மகாநாயக்கரைச் சந்தித்ததன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார்.

நாட்டில் உள்ள அனைத்து மகாநாயக்கர்கள், கத்தோலிக்க, இந்து, இஸ்லாமிய மதத் தலைவர்கள் என்னை பொது வேட்பாளராக ஜனாதிபதி தேர்தலில் களமிறங்குமாறு தொடர்ச்சியாகக் கோரி வருகின்றனர். அத்துடன் அரசியல் சிவில் அமைப்பினரும் அவ்வாறான கோரிக்கையை விடுத்துள்ளனர்.

தற்போது நான் அவர்களுடன் கலந்துரையாடல்களைச் செய்து வருகின்றேன். நாட்டுக்காக எந்தவிதமான சவால்களையும் ஏற்றுக்கொள்வதற்குத் தயாராகவே உள்ளேன். அந்த வகையில் எதிர்காலத்தில் உரிய தீர்மானம் எடுக்கப்பட்டு பகிரங்கமாக அறிவிப்பேன். பொதுவேட்பாளர் குறித்து தற்போதும் கோரிக்கைகள் உள்ளன. இன்னமும் தீர்மானம் எடுக்கவில்லை. கலந்துரையாடல்களின் இறுதியில் தீர்மானம் எடுக்கப்படும் என்றார்.

## பிரகடனம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறந்த இலங்கைக்கானமன்றத்தின்பிரதிநிதியான பியரதன தேரர் மற்றும் உலகத் தமிழர்பேரவையின்அவுஸ்திரேலிய பிரதிநிதி பிரகாஷ் இராஜசுந்தரம் ஆகியோர் கொழும்பில் ஐக்கிய நாடுகளின் வதிவிட பிரதிநிதி மார்க் அண்ட்ரே பிராஞ்ஞை சந்தித்து இமயமலைப் பிரகடனத்தை கையளித்தனர்.

இந்நிலையில் வதிவிடப்பிரதிநிதி மார்க் அண்ட்ரே பிராஞ் தெரிவிக்கையில், சிறந்த இலங்கைக்கான மன்றம் மற்றும் உலகத் தமிழர் பேரவை ஆகியவற்றின் பிரதிநிதிகள் என்னைச்சந்தித்தனர். 'இமயமலை பிரகடனம்' மற்றும் 'தேசிய உரையாடலுக்கான' திட்டங்கள் ஆகியவற்றை என்னுடன் பகிர்ந்து கொண்டனர். நல்லிணக்கம் மற்றும் மனிதஉரிமைகளுக்கானமரியாதை பற்றிய அவர்களின் சமூக மற்றும் மத உரையாடல்களின் மூலமாக புதுப்பிப்புகளை எதிர்பார்த்துள்ளனர் - என்றார்.

இதேவேளை, புத்தசாசன, மத மற்றும் கலாசார விவகாரங்களுக்கான அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவிடத்தில், மாதம் பகமஅசாஜிதிஸ்ஸதேரர், கித்தலாகம ஹேமசார நாயக்க தேரர் மற்றும் பேராசிரியர் பல்லேகந்தே ரத்னசார தேரர் ஆகியோர் இமயமலைப் பிரகடனத்தை கையளித்தனர்.

இதன்போது, நல்லை ஆதீன முதல்வருடனான சந்திப்பின் போது சுட்டிக்காட்டிய விடயங்களையும் தேரர்கள் அமைச்சரிடத்தில் வெளிப்படுத்தினார்கள்.

அதன்படி, திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலயம், குருந்தூர் மலை, காங்கேசன் துறையில்உள்ளஜனாதிபதிமாளிகை வளாகத்தில் உள்ள லிங்கேஸ்வரர் கோவில், கிருஸ்ணர் கோவில், சடையம்மா சாதுவின் சமாதி ஆகியனதொடாபில்காணப்படுகின்ற பிரச்சினைகளுக்கு நிரந்தரமான தீர்வொன்று வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

இதனடிப்படையில் அமைச்சர் விதுர, குறித்த ஆலயங்கள் சம்பந்தமான பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு அளிக்கப்படும் என்று உறுதிமொழி வழங்கியதோடு, வடமாகாண ஆளுநரின் உதவியுடன் பெருமளவான விவசாய நிலங்களுக்கு நீர் விநியோகம் தொடர்பான பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ளமையும் சுட்டிக்காட்டினார்.

## இந்தியாவிற்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் உள்ள அக்கட்சியின்கிளைக்காரியாலத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சாகலரத்நாயக்கஇந்தியாவுக்குச் சென்று இலங்கையுடன் பாலம் அமைப்பதற்கான பேச்சுக்களில் பங்கேற்றுள்ளார். இந்தியாவுடன் பாலம் அமைப்பது சம்பந்தமாக மக்கள் ஆணையற்ற ஒருவரால் எவ்வாறு சென்று பேச்சுக்களை மேற்கொள்ள முடியும்.

அவருக்கு மக்கள் ஆணை வழங்கப்படவில்லை. அவ்வாறான நிலையில் அவரால் எவ்வாறு செயற்பட முடியும். நாட்டின் வளங்களை விற்பனை செய்யும் ரணில்விக்கரமசிங்கவின்நிகழ்;ச்சி நிரலை முன்னெடுத்துச் செல்வதே அவரின் நோக்கமாகும். அதற்கு இடமளிக்க முடியாது என்றார்.

## பெண்களுக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முகநூல் ஊடாக இடம்பெறும் மோசடிகளும் அதிகரித்துள்ளது.

கடந்த வருடத்தின் முதல் 3 மாதங்களுடன் ஒப்பிடுகையில், இணையத்தளம்ஊடானமோசடிகள் தொடர்பான முறைப்பாடுகளில் சற்று அதிகரிப்பு காணப்படுகின்றது என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்திய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் மூலோபாய பொருளாதார வேலைத் திட்டத்தின்கீழ்இணக்கம்காணப்பட்ட திட்டங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தும் இயலுமை இரு நாடுகளுக்கும் உள்ளதெனவும் தெரிவித்தார்.வீழ்ச்சியடைந்துள்ள இலங்கை யின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க இந்திய அரசாங்கம் வழங்கிய ஆதரவிற்கு நன்றி கூறிய சாகல ரத்நாயக்க, சர்வதேச நாணய நிதியத்துடனானவேலைத்திட்டத்தில் இலங்கையின் முன்னேற்றம் குறித்து விளக்கமளித்தார்.

இலங்கையின் பொருளாதாரத்தைப் பலப்படுத்த, துரித முன்னேற்றம்அடையவேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டிய சாகல ரத்நாயக்க, அதற்காக இந்தியாவுடன் தற்போதுள்ள பொருளாதார ஒத்துழைப்பையும் பலப்படுத்த வேண்டியதன்முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார்.

இதன்போது இந்திய- இலங்கை வரலாற்றுத் தொடர்புகளை நினைவுகூர்ந்த சாகல ரத்நாயக்க, இலங்கையின் அயல் நாடான இந்தியாவுடனான வலுவான தொடர்புகளை ஏற்படுத்தி வருவதாகவும் சுட்டிக்காட்டினார்.

இக்கலந்துரையாடலில், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான இருதரப்பு திட்டங்களை உரிய நேரத்தில் நடைமுறைப்படுத்துவது குறித்து இருதரப்பும் கவனம் செலுத்தியதுடன், ஒவ்வொரு காலாண்டிலும் அதன் முன்னேற்றத்தை மீளாய்வு செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

# தேவாலயங்களில் பாதுகாப்புத் தீவிரம்

நாடளாவிய ரீதியில் இன்று உயிர்த்த ஞாயிறு ஆராதனைகள் நடைபெறும் அனைத்து கிறிஸ்தவ தேவாலயங்களிலும் பாதுகாப்புத் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருப்பதாகப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

இந்த பாதுகாப்பு ஏற்பாடுகள், இன்று பிற்பகல் ஆராதனை நிறைவடைந்து பக்தர்கள் அனைவரும் அவரவர் வீடுகளுக்கு செல்லும் வரை அமுல்படுத்தப்படும் என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இன்றையதினம்பெரியவெள்ளி ஆராதனைஆரம்பமானதையடுத்து பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில், மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளமைகுறிப்பிடத்தக்கது.

# சிறுவர்கள் மத்தியில் தொற்று நோய் பரவல்

## குழந்தை நல மருத்துவர் எச்சரிக்கை

கை, கால், வாய் தொடர்பான தொற்று நோய்கள் சிறுவர்கள் மத்தியில் பரவி வருவதாக கொழும்பு லேடிரிட்ஜ்வேவைத்தியசாலையின் குழந்தைகள் நல வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

இது தொடர்பாக சம்பந்தமாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

நோயினால் பீடிக்கப்பட்டுள்ள சிறுவர்களுக்குகாய்ச்சல்,தொண்டை வலி, வாய், கை, கால் மற்றும் பிட்டம் முதலான உறுப்புகளில் கொப்புளங்கள் ஏற்படுகின்றன.

இது சின்னம்மை போன்றது. ஆனால், சின்னம்மை ஏற்பட்டால் மார்புமற்றும்முதுகில்கொப்புளங்கள் தோன்றும். இது தொற்றக் கூடியது.

இதுபோன்ற அறிகுறிகள் பிள்ளைகளுக்கு தென்பட்டால் அவர்களை பாடசாலைக்கு அனுப்ப வேண்டாம் - என்றார்.

# மியான்மருக்குக் கடத்தப்பட்ட 8 இலங்கையர்களும் மீட்பு!

மியன்மாரில் சைபர் குற்றங்களில் ஈடுபடுத்துவதற்கென ஆட்கடத்தல் கும்பலால் கடத்தப்பட்ட 8 இலங்கையர்கள் மீட்கப்பட்டுள்ள நிலையில், அவர்களிடம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகள் நிறைவடைந்துள்ளதாக மியன்மாருக்கான இலங்கைத் தூதுவர் ஜனக பண்டார தெரிவித்துள்ளார்.

இதுதொடாபில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மியன்மாரில் தற்போது 48 இலங்கையர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். அவர்களும் விரைவில் மீட்கப்படுவார்கள். சைபர் குற்றங்களில் ஈடுபடுத்துவதற்கென ஆட்கடத்தல் கும்பலால் இலங்கையர்கள் கடத்தப்படுள்ளனர்.

தகவல்தொழில்நுட்பத்துறையில் வேலைபெற்றுத் தருவதாகக் கூறியே இவ்வாறு இலங்கையர்கள் கடத்தப்பட்டுள்ளளனர். எனவே அவர்களை விரைவில் விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் அதேநேரம் விடுவிக்கப்பட்டவர்கள் நாட்டுக்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டு வரப்படுகின்றது என்றார்.

## சு.கட்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சரத் ஏக்கநாயக்க தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

## தமிழரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆதரிக்கவும்.

2. ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான உயர் ஆணையரின் பரிந்துரைகளைப் பின்பற்றி, போரின் போது பொதுமக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும்மனிதஉரிமைமீறல்களுக்கு விரிவான சர்வதேச விசாரணைகள் மற்றும் பொறுப்புக்கூறலை ஆதரிக்கவும். அத்தகைய விசாரணையில் இனப்படுகொலை செய்யப்பட்டதா என்பது பற்றிய ஆராய்வதும் அடங்கும்.

3. சுயாதீனமான நீதித்துறை நடவடிக்கைகளை ஊக்குவிக்கவும், சாத்தியமான குற்றச்சாட்டுகளை சர்வதேசகுற்றவியல்நீதிமன்றத்திற்கு விசாரணைகளுக்காகப் பரிந்துரைக்கவும் அமெரிக்காவிற்கு ஐக்கிய நாடுகள் சபையில் - பொதுச் சபை பாதுகாப்பு கவுன்சில் மற்றும் மனிதஉரிமைகள்பேரவைஉட்பட- உள்ள தலைமைப் பாத்திரத்தை வாய்ப்பாகப் பயன்படுத்தவும் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# இறக்காமம் பிரதேச செயலக பெண்கள் கௌரவிப்பு நிகழ்வு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

'அவளின் பலம் நாட்டின் எதிர்காலம்' எனும் கருப்பொருளின் கீழ் இறக்காமம் பிரதேச செயலக பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்திப் பிரிவின் ஒருங்கிணைப்பில் பிரதேச மகளிர் மகா சங்கம் ஏற்பாடு செய்த சர்வதேச மகளிர் தினம், பிரதேச செயலாளர் அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம். றஸ்ஸான் (நளீமி) தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன் கலந்து சிறப்பித்தார்.

கௌரவ அதிதிகளாக உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அஹமட் நஸீல், கணக்காளர் எம். ஆர். நஸீமுல் ஹக், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் கே.எல். ஹம்சார் ஆகியோரும் விசேட அதிதிகளாக மாவட்ட மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சுரேக்கா எதிரிசிங்க, மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எம்.கே. சாஜிதா, சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் எம்.ஐ. பஸீனா, சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் பி. யஷோதா, கலாசார உத்தியோகத்தர் திருமதி நாளிகா தமயந்தி, முன்பிள்ளைப்பருவ உத்தியோகத்தர் ஆர்.எம். இம்டாட் மற்றும் உளவளத்துணை உத்தியோகத்தர் ஏ.எச். றகீப் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில், இஸ்லாமிக் ரிலீப் நிறுவனத்தால் முன்னெடுக்கப்பட்ட சுயபொருளாதார ஊக்கிவிப்பு வேலைத்திட்டத்தை சிறந்த முறையில் செயற்படுத்திவரும் சிறந்த சுயதொழில் முயற்சியாளர்களுக்கு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். மேலும் சிறந்த மகளிர் சங்க உறுப்பினர்களுக்கான கௌரவமும் வழங்கிவைக்கப்பட்டது.

பிரதேச செயலக பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்திப் பிரிவில் அர்ப்பணிப்புடன் சிறந்த முறையில் செயற்பட்டுவரும் உத்தியோகத்தர் அதிதிகளால் பொன்னாடை போர்த்தி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

மகளிர் சங்க உறுப்பினர்களின் கலை கலாசார நிகழ்வுகள், புலமையாளர் கௌரவிப்பு என பல்வேறு சிறப்பு நிகழ்வுகளும் இடம்பெற்றன. (05)

# அம்பாறை உகனையில் ஐ.தே.கட்சிக் கூட்டம்





(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை மாவட்டத்தின் உகன பிரதேசத்துக்கான ஐக்கிய தேசிய கட்சியின் பொதுக்கூட்டம் முன்னாள் பிரதேச சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஜயந்த ரத்நாயக தலைமையில் இடம்பெற்றது.

முன்னாள் பிரதியமைச்சர் அனோமா கமகே இந் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டார். (05)

# பட்டிருப்பு தேசியப் பாடசாலை மாணவர்கள் இளம் ஆராய்ச்சியாளர் போட்டியில் சாதனை






(அஸ்ஹர் இப்றாஹிம்)

மட்டக்களப்பு, பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை -) களுவாஞ்சிகுடி மாணவர்கள் இளம் ஆராய்ச்சியாளர் போட்டியில் பங்குபற்றி தேசிய ரீதியில் வெற்றி பெற்றதுடன் கல்வி அமைச்சால் முதல் தடவையாக நடத்தப்பட்ட ஆராய்ச்சியாளர் மாநாட்டுக்கு அழைக்கப்பட்டு நெக்ஸ்ற் ஜென் நுண்ணறிவு நாளிதழில் பட்டிருப்பு தேசிய பாடசாலையின் பெயரையும் பொறித்துள்ளனர்.

பாடசாலை மாணவர்களான ம.தசாப்தன், தி.சேம், சு.சுமித்ரா, த.வேதுஜா, கோ.சஸ்மிகா, அ.சஜித், ர.கேனுசாந், வ.பத்மலோஜனி, ச.திருத்திகா, சி.தரண்யா மற்றும் வழிகாட்டிய பாடசாலை ஆசிரியர்களான செல்வராஜா தேவகுமார், தங்கராசா யுதர்சன் ஆகியோருக்கு அதிபர் உள்ளிட்ட பாடசாலை சமூகம் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர்.

இந் நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட பதினைந்து பாடசாலைகளில் தமிழ்மொழியில் தெரிவு செய்யப்பட்ட ஒரே ஒரு பாடசாலை பட்டிருப்பு தேசிய பாடசாலை - களுவாஞ்சிகுடி என்பது குறிப்பிடதக்கது. (05)

# இணைந்த கரங்கள் அமைப்பால் கற்றல் உபகரணங்கள் வழங்கல்








(நூருல் ஹுதா உமர்)

இணைந்த கரங்கள் உறவுகளின் நிதிப்பங்களிப்பில் பட்டிருப்பு கல்வி வலயத்தில் உள்ள வக்கியெல்லை மட் ஃபம்ஃ விளாந்தோட்டம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் வறிய குடும்பங்களை சேர்ந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் ச.திருநாவுக்கரசு தலைமையில் பாடசாலையின் ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெற்றது.

கல்விக்கு வறுமை தடையாக இருக்க கூடாது என்று 'ஏழ்மையை ஒழிப்போம் கல்வியை விதைப்போம்' எனும் தொனிப்பொருளில் இணைந்த கரங்கள் அமைப்பு மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை கஷ்ட பிரதேசங்களில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு வழங்கி வருகின்றது. அதன் தொடர்ச்சியாக இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். சிறிதரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் பட்டிருப்பு கோட்டக் கல்விப் பணிப்பாளர் அருள்ராசாவும் பாடசாலை ஆசிரியர்களான பே.கணேசலிங்கம், செல்வி சீ.விஜிதா, திருமதி ந.கௌசல்யா, இணைந்த கரங்கள் அமைப்பின் உறுப்பினர்களான சி.காந்தன், சி.துலக்சன், ஏ.எம்.ரிஸ்வான் உட்பட பலரும் கலந்து கொண்டு மாணவர்கள் பாடசாலைக்கு செல்வதற்கான கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தனர். (05)

# கரைச்சி பலநோக்கு கூட்டுறவுசங்க சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள்

கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் மகளீர் தின நிகழ்வு வெள்ளிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

கூட்டுறவுச்சங்கத்தின் 155 ஆம் கட்டை வளாகத்திலுள்ள மண்டபத்தில் சங்கத்தின் செயலாளர் கு.சித்திரபானு தலைமையில் நடைபெற்ற மகளீர் தின நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட ஓய்வு நிலை அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரனும் விருந்தினர்களாக சங்கத்தின் தலைவர் சு.யதீஸ்வரன் ,சங்க இயக்குநர் சபை உறுப்பினர்கள் ,பொதுமுகாமையாளர் உள்ளிட்ட சங்க பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

ஓய்வு நிலை மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன் அரசாங்கதிபராக இருக்கும் போது சங்கத்திற்கு ஆற்றிய சேவைகளுக்காக சங்க உறுப்பினர்களால் கௌரவிக்கப்பட்டார். (05-113)



காலைக்கதிர் Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# அரசுத் தலைவரின் காதில் ஏறுமா?

இலங்கையயில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பில் உடனடியாகப் பொறுப்புக்கூறல் நிலைநாட்டப்படவேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்தியுள்ளது. இவ்வாறான சம்பவங்கள் மீண்டும் நிகழாதிருப்பதை உறுதிசெய்யவேண்டியது அவசியம் என்றும் அது சுட்டிக்காட்டியுள்ளது.

'தெற்காசியப்பிராந்தியத்தில்வலிந்துகாணாமலாக்கப்படல் சம்பவங்களின் தடங்கள்' எனும் தலைப்பில் அந்த அமைப்பு வெளியிட்டிருக்கும் தரவு அறிக்கையில் இலங்கை அரசின் கடமையை, பொறுப்பை அது மீண்டும் வலியுறுத்தியுள்ளது. போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியை இலங்கையில் தொடர்ந்து வலியுறுத்தி வரும் அமைப்புக்களில் ஒன்று சர்வதேச மன்னிப்புச் சபை. ஏற்கனவே பல தடவைகளும் அது காணாமற்போனோருக்கான நீதியை வலியுறுத்தி வந்திருக்கின்றது.

இலங்கையின் கறைபடிந்த வலிந்து காணாமலாக்கப்படல் வரலாறு மனித உரிமைகள் வலுவாகப் புறந்தள்ளப்படுவதைக் காண்பிக்கின்றது என்று மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டுகின்றது. இலங்கையில் 60 ஆயிரம் –முதல் ஒரு லட்சம் வரையான வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்கள் பதிவாகியிருக்கிறது, இது உலகிலேயே அதிக எண்ணிக்கையான வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்களின் பட்டியலில் இரண்டாவது இடம் என்று மன்னிப்புச் சபை அறிக்கை கூறுகின்றது.

இலங்கை ஆளும் தரப்புக்கள் பல தசாப்தகாலமாக தீவிரவாதத்தைத் தோற்கடித்து, தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தல் என்ற போர்வையில் அரச பயங்கரவாதத்தை பயன்படுத்துவதற்கான ஆயுதமாக வலிந்து காணாமலாக்குவதைப் பயன்படுத்திவந்திருக்கின்றன என்பதையும் மன்னிப்புச் சபையின் அறிக்கை மிக முக்கியமாக, ஆணித்தரமாக இடித்துரைத்திருக்கிறது.

1970 மற்றும் 1980களில் ஜனதா விமுக்தி பெரமுன (மக்கள் விடுதலை முன்னணி) கிளர்ச்சி இடம்பெற்ற காலப்பகுதியில் தொடங்கிய வலிந்து காணாமலாக்கப்படல்கள், தமிழ் இளைஞர்கள் அரச படையினரால் கடத்தப்படல் போன்ற சம்பவங்கள் மூலம் உள்நாட்டு ஆயுதப்போராட்டத்தின்போது மேலும் தீவிரமடைந்ததையும் அறிக்கை கூறுகின்றது. போருக்குப் பின்னர் அது முடிவுக்கு வந்தாலும், ஊடகவியலாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், சிறுபான்மையின சமூகத்தினர் ஆகியோரை இலக்குவைத்து அரச அனுசரணையுடன்கூடிய வெள்ளைவான் கடத்தல்கள் எனும் புதிய பாகம் தொடங்கியிருப்பதாகவும் எச்சரிக்கிற அந்த அறிக்கை.

வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பத்தினரின் உண்மை, நீதி மற்றும் இழப்பீட்டுக்கான தொடர் போராட்டம் அரச ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாவதாகவும் அறிக்கை சாடுகின்றது. வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்கள் தொடர்பில் நீதியை நிலைநாட்டுமாறு தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டுவரும் நிலையில், அரசாங்கம் காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் மற்றும் இழப்பீட்டுக்கான அலுவலகம் போன்ற கட்டமைப்புக்களை உருவாக்கியுள்ளதே தவிர, அர்த்தமுள்ள பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதற்கான முயற்சிகள் மிகவும் மந்தகரமான நிலையிலேயே உள்ளன என்பதையும் சுட்டிக்காட்டும் அறிக்கை, இலங்கை அரசின் பொறுப்புக்கூறல் கடமையை மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

ஒருகாலத்தில் இதுபோன்ற மனித உரிமைகள் விடயத்தில் தன்னை பாதிக்கப்பட்டவர்களின் ஆதரவாளனாகக் காட்டிக்கொண்ட ரணில் விக்கிரமசிங்கவே தற்போது அரசுத் தலைவராகப் பதவியில் உள்ளார். இலங்கையின் பொறுப்புக்கூறல் கடமையை நிறைவேற்றுவேன் என்று ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் 2015 வாக்குறுதியளித்தவர் அவர். ஆனால், பின்னர் அது தொடர்பான மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த எந்தவித நடவடிக்கையும் எடுக்காதவர். அவரது காதுகளில் மன்னிப்புச் சபையின் கருத்துக்கள் ஏறுமா என்பதே இப்போதுள்ள கேள்வி.

# இந்தியாவில் தேர்தல் நியாயமாக நடக்குமா?

யோகேந்திர யாதவ்




மக்களவைத் தேர்தல் தொடர்பாக இப்போதே பாதுகாப்பான ஓர் எச்சரிக்கை: 'சுதந்திர இந்தியாவில் நடைபெறும் 2024 தேர்தல், நேர்மையாகவும் நியாயமாகவும் நடக்காது'.

இந்தத் தேர்தலில் பல நடைமுறைகள் மாற்றப்பட்டு ஆளுங்கட்சியின் கண்ணசைவுக்கு ஏற்ப அது நடத்தப்படுமா அல்லது முழுக்கவே கேலிக்கூத்தாகி விடுமா என்பது இப்போதைக்குத் தெரியாது.

டில்லி முதல்வர் அர்விந்த் கேஜ்ரிவால் கைதுசெய்யப்பட்ட விவகாரத்திலிருந்து, 'நம்பத்தகுந்த தேர்தல்' என்ற நிலையிலிருந்து மாறிவிடும் என்பதற்கான தொடக்கம் தெரிந்துவிட்டது. பக்கத்து நாடுகளான பாகிஸ்தான், வங்கதேசத்தைப் போலவோ அல்லது தொலைவிலிருக்கும் ரஷ்யாவைப் போலவோ தேர்தல் நடைமுறைகளை கேலிக்கூத்தாக்கும் திசையில் ஒட்டி நடக்கத் தொடங்கியிருக்கிறோம்.

இப்படி எழுத மிகுந்த வேதனைப்படுகிறேன். இந்தியாவின் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனநாயகத்துக்கு என்னை நானே தூதுவனாகக் கருதி உலக அரங்கில் பேசியிருக்கிறேன். மேற்கத்திய நாடுகளும் ஐரோப்பாவை மையமாக வைத்த அவற்றின் தரக் குறியீடுகளையும் எதிர்கொண்டு பேசியபோது இந்தியத் தேர்தல் நியாயமாகவும் நேர்மையாகவும் நடப்பதாக வாதிட்டது அல்லாமல் கொண்டாடியும் இருக்கிறேன்.

முதலாவது மக்களவைத் தேர்தலை 1951-52இல் நடத்திய ஐம்பதாவது ஆண்டு கொண்டாட்டத்தின்போது உலகின் பிற நாடுகளிலிருந்து வந்த தேர்தல் ஆணையர்களிடையே உரையாற்ற இந்தியத் தேர்தல் ஆணையம் 2002இல் என்னை அழைத்திருந்தது. இந்தியத் தேர்தல் ஆணையத்தின் வலிமையையும், தேர்தலில் கட்சிகள் நிகழ்த்தும் போட்டியையும்,



கோடிக்கணக்கான மக்களை எளிதாக வாக்களிக்க வைக்கும் நிர்வாக ஆற்றலையும் விளக்கிப் பெருமிதம் பொங்கப் பேசினேன்.

வங்கத்தில் 1972இல் நடந்த சட்டப்பேரவைப் பொதுத் தேர்தல், அசாமில் 1983இல் நடந்த பேரவைத் தேர்தல், பஞ்சாபில் 1992இல் நடந்த பேரவைத் தேர்தல் போன்றவை, 'நம்பகமான தேர்தல்' என்பதற்கான குறைந்தபட்ச வரம்புகளைக்கூட மீறியவை.

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் நடந்த பெரும்பாலான சட்டப்பேரவைத் தேர்தல்கள் (1977, 2002 விதிவிலக்கு) மோசடியானவைதான். 1987இல் நடந்தது மிகவும் அவமானகரமான தேர்தல்.

இந்திரா காந்தி அறிவித்த நெருக்கடிநிலைக்குப் பிறகு நடந்த 1977 மக்களவைத் தேர்தல் நாள் குறிக்கப்பட்ட பிறகு பரப்புரை, வாக்களிப்பு, வாக்குகளை எண்ணுவது எல்லாமே முறையாக நடந்தன. தேர்தல் முடிவே அதற்குச் சாட்சி (காங்கிரஸ் தோற்றது, எதிர்க்கட்சி ஜனதா வென்று ஆட்சியைப் பிடித்தது). 2019 மக்களவைத் தேர்தலின்போது பாஜகவிடம் தொண்டர் பலம், பண பலம், ஊடக ஆதரவுப் பலம், அரசு நிர்வாக இயந்திர பலம், தேர்தல் ஆணையத்தின் அனுசரணை என்று எல்லாமே இருந்தும் - கட்சி சார்பான பெரிய செயல்பாட்டுக்கு, அது இடம் தரவில்லை.

### தொடர்ச்சியான வீழ்ச்சி

அந்த வரம்புகள் அனைத்துமே இந்த முறை மீறப்படுகின்றன. இந்தக் கட்டுரையை நான் எழுதும் நேரத்தில் டில்லியில் அமலப்பிரிவு இயக்குநரக அதிகாரிகள் என் வீட்டுக்குப் பக்கத்தில் இருக்கும் ஆம் ஆத்மிக் கட்சிப் பிரமுகரின் வீட்டுக்குச் சோதனைக்காகப் போகிறார்கள். பத்திரிகைகளைப் புரட்டி, தலைப்புகளை மட்டும் பார்க்கிறேன். வருவாய் புலனாய்வு இயக்குநரகம் தொடர்ந்த வழக்கில், தெலங்கானாவில் பாரத் ராஷ்ட்ர சமிதி கட்சித் தலைவர் கே.கவிதா கைதுசெய்யப்பட்டார் கேஜ்ரிவால் கைதைக் கண்டித்து ஆஆக தொண்டர்கள் தில்லியில் போராட்டம் இமாச்சலத்தில் ஆளும் காங்கிரஸைச் சேர்ந்த 6 பேரவை உறுப்பினர்கள் தகுதி நீக்கம் செய்யப்பட்ட பிறகு - பாஜகவில் சேர்ந்தனர் காங்கிரஸ் கட்சியை முடக்கும் அளவுக்கு, வருமான வரித் துறை மிகப் பெரிய தொகையை அபராதமாக விதிக்கிறது 'கொள்கை ஆராய்ச்சி மையம்' என்ற அமைப்புக்கு அரசு அளித்த உரிமம் ரத்துசெய்யப்பட்டதால் அதன் தலைமை நிர்வாகி பொறுப்பிலிருந்து யாமினி ஐயர் விடுவிக்கப்படுகிறார அன்னிய நாட்டு நன்கொடைகள் ஒழுங்காற்றுச் சட்டப்படி அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது, வரி செலுத்துமாறு அதற்கு நோட்டீஸ் அனுப்பப்படுகிறது நடிகை கங்கணா ரணாவத் தொடர்பாக கருத்து தெரிவித்த காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் சுப்ரியா ஶ்ரீநடேவுக்கு எதிராக நாடெங்கும் கண்டனக் குரல்கள் எழுகின்றன அதுவும் அவர் மன்னிப்பு கேட்ட பிறகும் வங்கத்தில் முதல்வர் மம்தா பானர்ஜி குறித்து ஆபாசமாக கருத்து தெரிவித்த திலீப் கோ/க்கு எதிராக அங்கொன்றும் இங்கொன்றுமாகத்தான் கண்டனங்கள்.

அடுத்த நாள் காலை வாட்ஸப்பில் மேலும் பல தகவல்கள்: சிவசேனை (உத்தவ் பாலாசாஹேப் தாக்கரே - யுபிடி) சார்பில் காலை 9 மணிக்கு வேட்பாளர் அறிவிக்கப்படுகிறார் காலை 10 மணிக்கு அவருக்கு மூன்று ஆண்டுகளுக்கு முந்தைய விசாரணை தொடர்பாக அமலப்பிரிவு இயக்குநரகம் நோட்டீஸ் அனுப்புகிறது.

'டைம்ஸ் ஆஃப் இந்தியா', அரசியல் நிகழ்ச்சிகளை 'டேன்ஸ் ஆஃப் டெமாக்ரசி' என்று தொகுத்து வழங்குவது குறிப்பிடத்தக்கது. அங்கொன்றும் இங்கொன்றுமாக சில சம்பவங்களைக் கூறுவதும், பத்திரிகைகளின் தலைப்புச் செய்திகளும் வலிமையான ஆதாரங்கள் இல்லைதான் ஜனநாயகம் தேர்தல் உதவிகள் தொடர்பாக சர்வதேச நிறுவனம் (ஐஐடிஇஏ) 173 நாடுகளைத் தொடர்ந்து கண்காணித்து அவற்றின் தேர்தல், அரசியல் சுதந்திரம் ஆகியவற்றை மதிப்பிடுகிறது. 2014 முதல் 2022 வரையில் இந்தியாவின் மதிப்பெண் 71மூலிருந்து 60மூ ஆக சரிந்துவிட்டது. கடந்த ஐந்தாண்டுகளில் மோசமான நாடுகள் வரிசையில் 50ஆவது இடத்திலிருந்து 6ஆவது இடத்துக்குக் கீழிறங்கிவிட்டது.

இதை மேற்கத்திய நாடுகளின் சதி என்று கூறக்கூடும். அதன் இணையதளத்தைப் பார்த்தால் அந்த அமைப்பில் இந்தியாவும் உறுப்பினர் என்பதும் அதன் நிர்வாகக் குழுவில் இந்தியாவின் முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையர் சுநீல் அரோராவும் இருக்கிறார் என்பதும் தெரியும். நேர்மையான தேர்தல் குறியீட்டெண் என்ற இன்னொரு சர்வதேச மதிப்பீட்டில், இந்தியாவுக்கு 59மூ மதிப்பெண்தான் தரப்பட்டுள்ளது. அத்துடன் மஞ்சள் நிற எல்லையில் இந்தியா இருக்கிறது. பிரேசில், கானா, நேபாளத்துக்குக் கீழே இருப்பது ஆறுதல்.

(5ஆம் பக்கம் பார்க்க...)

# இந்தியாவில் தேர்தல் .....

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இப்படியே போனால் 2024 தேர்தலுக்குப் பிறகு ஆரஞ்சு வண்ணம் இந்தியாவுக்குத் தரப்படலாம். 'இந்தியா சுதந்திரமான ஜனநாயக நாடு அல்ல - தேர்தல் ஜனநாயக நாடு மட்டுமே' என்று அறிஞர்கள் வாதிடுகின்றனர். அந்த முடிவையும் அவர்கள் விரைவில் மாற்றிக்கொண்டுவிடக்கூடும். ரஷ்யாவில் நடந்ததைப் போல கேலிக்கூத்தோ, பாகிஸ்தானில் நடந்ததைப் போல மோசடியோ அல்ல என்றாலும் 'மோசமான ஜனநாயக நாடு' என்ற நிலைக்குப் போய்க்கொண்டிருக்கிறோம். நியாயமாக தேர்தல் நடைபெறும் என்ற நம்பிக்கையை இழக்கும் வகையில், சுற்றி வளைப்புகள் தொடங்கியுள்ளன. இது தொடர்ந்தால், வாக்குப்பதிவு இயந்திரத்தில் பொத்தானை அமுக்கும் சுதந்திரமும், வாக்குகளை எண்ணுவதில் நேர்மையும் மட்டும் நிகழலாம். இந்தத் தேர்தல் நேர்மையாகவும் நடுநிலையாகவும் நடைபெறாது என்பதற்கு நான் ஐந்து அடையாளக் குறியீடுகளைப் பார்க்கிறேன்.

**முதலாவது குறியீடு:**

டி.என்.சேஷன் தொடங்கிவைத்த சுதந்திரமான தேர்தல் ஆணையம் என்ற மரபின் இறுதிப் பகுதிக்கு வந்துவிட்டோம். தேர்தல் ஆணையர் அருண் கோயல் ஏன் திடீரென விலகினார் என்ற மர்மம் தீருவதற்கு முன்னால், காதும் காதும் வைத்தார்போல இரண்டு தேர்தல் ஆணையர்கள் நியமிக்கப்பட்டனர். தேர்தல் ஆணையர்களைத் தேர்வுசெய்யும் குழுவில் பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருடன் உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியும் இருக்கவேண்டும் என்ற அதன் தீர்ப்பு மதிக்கப்படவில்லை. அதை உச்ச நீதிமன்றம் கேள்விக் கேட்பதற்கு அவகாசம் தராமல், அவசரம் காட்டப்பட்டது கேலிக்கூத்தானது.

இப்போதைய தலைமைத் தேர்தல் ஆணையர் ராஜீவ் குமார் தன்னிச்சையாகச் செயல்படுகிறார் என்று யாரும் குறையும் கூறவில்லை, பதவி விலகிய கோயலின் விசுவாசம் குறித்து யாரும் கேள்வியும் கேட்கவில்லை. இப்போதைய ஆட்சியாளர்களுக்கு விசுவாசிகளான இரண்டு உயர் அதிகாரிகள் நியமிக்கப்பட்ட விதமானது, தேர்தல் ஆணையத்தில் இருந்தவர்கள், ஆளுங்கட்சியின் உத்தரவு எதற்காவது கட்டுப்பட விரும்பவில்லையா அல்லது விரும்பியும் செய்ய முடியாமல் போய்விட்டதா என்று புரியவில்லை.

வெளிப்படையாகச் சொல்வதென்றால், தேர்தல் ஆணையத்தின் சுதந்திரம் என்பது மக்களவைத் தலைவர், சட்டப்பேரவைகளின் தலைவர் ஆகியோருடைய சுதந்திரம் மாதிரிதான். தேர்தல் ஆணையர் என்பவர், தேர்தலை நடத்த வேண்டிய அதிகாரியாக மட்டும்தான் - சேஷன் காலத்துக்கு முன்னால் இருந்ததைப் போல - தொடர்கிறார். ஆளுங்கட்சி விரும்பும் வகையில் தேர்தலை நடத்தி முடிக்கும் அமைப்பாகக்கூட அது இனி மாறிவிடலாம்.

**இரண்டாவது அறிகுறி:**

தேர்தல் நடத்தை விதி நெறிமுறைகளைக் குப்பையில் போடும் அரசின் செயல்கள், இரண்டாவது அறிகுறியாகும். எந்தக் காலத்திலும் தேர்தல் நடத்தை நெறிமுறைகள் முழுமையாக அமல்செய்யப்படுவதில்லை ஆனால், காலம் செல்லச் செல்ல அதை நீர்த்துப்போக வைப்பது அதிகமாகிறது. தேர்தல் அட்டவணை அறிவிப்பும், நடத்தை நெறிமுறைகள் அமலுக்கு வந்துவிட்டதாக அறிவிப்பதும் ஆளுங்கட்சியை ஒரு கட்டுக்குள் வைக்கும் முயற்சிதான்.

நடத்தை நெறிமுறைகள் அமலுக்கு வந்த பிறகும் தில்லி முதல்வர் கைதுசெய்யப்பட்டிருப்பதும், எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்கள் வீடுகளில் அமல் பிரிவு இயக்குநரகம் திடீர் சோதனைகளை நடத்துவதும் புதிய முன்மாதிரிகளாகும். நடத்தை நெறிமுறைகள் எதிர்க்கட்சிகளுக்குத்தான் ஆளுங்கட்சிக்கு இல்லை என்பதே இதன் பொருள். எதிர்க்கட்சி வேட்பாளர்கள் மனுதாக்கல் செய்வதைத் தடுக்கவில்லை, எதிர்க்கட்சிகள் சட்ட விரோதமானவை என்று அறிவித்துவிடவில்லை, வாக்காளர்கள் வாக்களிக்க முடியாமல் தடுக்கப்படவில்லை, வாக்குகள் எண்ணிக்கையின்போது அப்பட்டமான மீறல்கள் இல்லை என்று வேண்டுமானால் திருப்திப்படலாம்.

**மூன்றாவது அறிகுறி:**

எதிர்க்கட்சிகளுக்குத் தேர்தல் செலவுக்கு பணமே கிடைக்காமல் வற்றச் செய்துவிட்ட செயல். ஆளுங்கட்சிகள் எப்போதுமே தேர்தல் நிதியாக பெருந்தொகையைக் கைப்பற்ற விரும்பும், எதிர்க்கட்சிகளுக்குக் கொடுக்கக் கூடாது என்று புரவலர்களை எச்சரிக்கும். முதன்முறையாக, வரம்பின்றி பணம் பெறுவதில் திருப்தி அடைந்துவிடாமல் வேறு சில வேலைகளிலும் ஆளுங்கட்சி ஈடுபட்டுள்ளது.

தேர்தல் நன்கொடை பத்திர விற்பனை என்பது மிகப் பெரிய ஊழலின் வெளியில் தெரியும் சிறிய முனைதான். எதிர்க்கட்சிகளுடைய வங்கிக் கணக்குகளைக்கூட வரி பாக்கிக்காக முடக்கிவைத்து அவற்றைச் செயலற்றதாக்குகிறது ஆளுங்கட்சி. இது ஆளுங்கட்சி மட்டும் போட்டி போடும் வலிமையுள்ள தேர்தலாக இருக்கப்போகிறது.

**நான்காவது அறிகுறி:**

சந்தேகத்துக்குரிய மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம், அதில் பதிவாகும் வாக்குகளைச் சரிபார்ப்பதற்கான பதிவுச் சீட்டு துணை இயந்திரம் பற்றியது. இதைப் பற்றி வேறு கட்டுரைகளில் எழுதியிருப்பதால் இங்கே அதிகம் விளக்கப்போவதில்லை. வாக்குப்பதிவு இயந்திரத்தில் தில்லுமுல்லு செய்ய முடியும் என்ற சந்தேகம் எதிர்க்கட்சிகளுக்கு இருக்கிறது, ஆனால், இந்தச் சந்தேகத்தைப் போக்க வேண்டியது தனது கடமை என்று தேர்தல் ஆணையம் கருதவில்லை. 'இந்தியா' கூட்டணிக் கட்சிகள் நேரம் ஒதுக்கக் கோரியும், அவர்களைச் சந்திக்க ஆணையம் மறுத்துவிட்டது.

இந்தியத் தேர்தல் ஏன் நம்பகமாக இருந்துவருகிறது என்றால் தோற்றவர்கள் முடிவை, நேர்மையானது என்று ஒப்புக்கொள்வதால்தான். இனி அந்த நம்பகத்தன்மையும் இந்தத் தேர்தலுக்குப் பிறகு இருக்காது.

**ஐந்தாவது அறிகுறி:**

அரசமைப்புச் சட்டம், தேர்தல் தொடர்பான சட்டக் கட்டமைப்புகள் ஆக்கிரமிக்கப்படுவது. தேர்தலுக்குச் சில நாள்களுக்கு முன்னதாக குடியுரிமை திருத்தச் சட்டம் தொடர்பான விதிகளை ஒன்றிய அரசு அறிவிக்கிறது.

குடியுரிமை பெறுவதில் அனைவருக்கும் சம உரிமை என்பதைக் குலைக்கும் வகையில், ஒரு மதத்தவருக்கு மட்டும் அது மறுக்கப்படுகிறது. இந்தத் தேர்தலின் முடிவை மாற்றும் அளவுக்கு அது முக்கியமானதாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் பாரபட்சமான ஒரு விதியை உச்ச நீதிமன்றம் ரத்துசெய்யாமல் விட்டால், எதிர்காலத்தில் இதைவிட பாரபட்சமான விதியை அரசு கொண்டுவர தவறான முன்னுதாரணமாக அமைந்துவிடும். போலிச் செய்திகளை ரத்துசெய்யும் அதிகார விதிகளை உச்ச நீதிமன்றம் இந்த முறை நிறுத்திவைத்தாலும், எதிர்காலத்தில் செய்தித் தணிக்கைக்கான அச்சாரம் இப்போது போடப்பட்டிருக்கிறது. இது மோசமான அடுத்த அறிகுறியாகும்.

இதுவரை நடந்ததில்லை என்று சொல்லும் இன்னொரு மோசமான உதாரணம், அசாமில் - மக்களவைத் தொகுதி எல்லை மறுவரையில் - நடந்திருக்கிறது. அமெரிக்காவில் நடைமுறையில் இருக்கும் எல்லைகளை விருப்பப்படி மாற்றிக்கொள்ளும் ஜெர்ரிமேண்டரிங் நடைமுறையை அசாம் அரசு நடைமுறைப்படுத்தி இருக்கிறது. ஆளுங்கட்சிக்கு சாதகமாக எல்லைகள் மாற்றப்பட்டதைத் தேர்தல் ஆணையம் அங்கீகரித்துள்ளது. எதிர்காலத்தில் மக்களவைத் தொகுதி எல்லைகள் மாற்றப்படுவதற்கு இதுவே முன்னுதாரணமாகிவிடும். 1952இல், 'வயது வந்த அனைவருக்கும் வாக்குரிமை' என்று இந்திய அரசு முடிவெடுத்தபோது மேற்கத்திய நாடுகள் நம்பமறுத்ததுடன் இழிவாகப் பேசின. இது சாத்தியம்தான் என்பதை நம்முடைய திறமையான வழிகள் மூலம் காட்டிவிட்டோம். பிரிட்டனிடமிருந்து விடுதலை பெற்ற பல நாடுகளுக்கு நாம் ஜனநாயக நடைமுறைகளில் வழிகாட்டியாகத் திகழ்ந்துவருகிறோம். அந்த நம்பிக்கையை, நன்மதிப்பை நாம் இழந்துவிடக்கூடாது.

**நன்றி : அருஞ்சொல்**




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road, Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# வளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சின் நடமாடும் சேவை

## வவுனியாவில் நடந்தது






'நானே ஆரம்பம் வெல்வோம் ஸ்ரீலங்கா -சிமாட் சூரன்களோடு' எனும் தொனிப்பொருளிலான தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் நடமாடும் சேவை வவுனியா காமினி மகாவித்தியாலய விளையாட்டரங்கில் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

வெளிநாட்டு வேலைவாய்ப்புகள், வெளிநாடுகளில் பணிபுரிவோரின் முறைப்பாடுகளைப் பொறுப்பேற்றல், தொழில் வங்கியில் பதிவு செய்தல், வெளிநாடுகளில் பணிபுரிவோருக்கு உரிய நஷ்டஈடு- சம்பளம் - காப்புறுதி தொடர்பான சேவைகள், ஈரிளவ் தொடர்பான சேவைகள், தொழிற்துறை பாடநெறிகள் தொடர்பான பதிவு, தொழில் முனைவாளர்களுக்கு அபிவிருத்தி மேம்பாட்டு பயிற்சிகளுக்கான பதிவு, உத்தேச தொழில்வாய்ப்புகள் சட்டம் தொடர்பான விழிப்புணர்வு, வெளிநாடுகளில் பணிபுரிவோரின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கல் போன்ற பல சேவைகள் இவ் நடமாடும் சேவையூடாக முன்னெடுக்கப்பட்டது.

அத்துடன் ருமேனியா, மத்திய கிழக்கு நாடுகள், இஸ்ரேல், ஐரோப்பா நாடுகளில் தொழில் ஒன்றை பெற்றுக் கொள்வது தொடர்பாக முகவர் நிறுவனங்களால் தெளிவூட்டல்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன், அதிதிகளாக கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் கே.காதர் மஸ்தான், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான குலசிங்கம் திலீபன், ஐக்கிய தேசியக் கட்சியின் வன்னி தேர்தல் தொகுதி அமைப்பாளர் ம.மயூரதன், மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத்சந்திர, பிரதேச செயலாளர்கள், மாவட்ட மற்றும் பிரதேச செயலக அதிகாரிகள், தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் அதிகாரிகள், அரச மற்றும் அரசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், மாணவர்கள், பொதுமக்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

நடமாடும் சேவையில் முன்னெடுக்கப்படும் சேவைகளை நேரில் சென்று தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார பார்வையிட்டமையுடன் வெளிநாடுகளில் பணிபுரிவோரின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்களையும் வழங்கி வைத்தார். 05 - 100)


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்



SUPERMARKET

4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர் Kalaikkathir

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை உள்ளடங்கலாக அனைத்து நாடுகளுக்குமான பயண வழிகாட்டல்களைத் தயாரிக்கும்போது பிரிட்டன் குடிமக்களின் பாதுகாப்பையே தாம் முன்னிலைப் படுத்துகின்றொம்.

பிரித்தானியர்கள் தமது வெளிநாட்டுப்பயணங்கள் தொடர்பில் அறிவார்ந்த தீர்மானங்களை மேற்கொள்வதற்கு உதவும் வகையில் எமது பயண வழிகாட்டல்கள் தயாரிக்கப்படுவதுடன், அதில் 'அச்சுறுத்தல் மதிப்பீடானது' தொடர்ந்து மீளாய்வுக்கு உட்படுத் தப்படும்.

அதேபோன்று எமது பயண வழிகாட்டலானது பிரித்தானிய பிரஜைகளுக்கு ஏற்படக்கூடிய அச்சுறுத்தல் தொடர்பான மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டதாகும்.

இம்மதிப்பீடு பிற நாடுகளிலுள்ள எமது தூதரகங்கள் மூலம் கிடைக்கப்பெறும் தகவல்கள், பிற நாட்டு அரச கட்டமைப்புக்களின் தகவல்கள் உள்ளடங்கலாக நம்பத்தகுந்த நிபுணத்துவ தகவல்களின் பிரகாரமே மேற்கொள்ளப்படுகிறது என்றார்.

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எமது போராட்டங்களை நீர்த்துப்போகச் செய்வதற்காக பல அமைப்புக்கள் முற்படுகின்றன. எனவே, குற்றம் இழைத்தவர்களை சர்வதேச நீதிமன்றத்தில் பாரப்படுத்தி எமக்கான நீதியை வழங்கவேண்டும். அதுவரை நாம் போராடிக்கொண்டே இருப்போம்" என்று போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டோர், 'காணாமற்போனோர் தொடர்பாக விசாரணை செய்வதற்கு நியமிக் கப்பட்ட (ஓ.எம்.பி) அலுவலகம் கண்துடைப்பு நாடகம்', 'சர்வதேச விசாரணையே எமக்கு தேவை', '12 ஆணைக்குழுக்கள் அமைத்தும் பயன் இல்லை' போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தியிருந்தனர்.

## வெடுக்குநாறி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடைந்துள்ளன.

மகா சிவராத்திரி தினத்தில் பாதுகாப்புப் படைகள் பக்தர்களின் உணவு, தண்ணீர் மற்றும் பிற அடிப்படைத் தேவைகளைப் பறித்ததோடு, பலவந்தமான அவமானப்படுத்தும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொண் டுள்ளன. குறிப்பாக ஆலயத்தின் பூசகர் உள்ளிட்ட பக்கதர்கள் தடுத்து வைக்கப்பட்டுப் பின்னர் விடுவிக் கப்பட்டும் உள்ளனர்.

பலநூற்றாண்டுகள் பழமையான கலாசார மரபுகளை அழித்து பெரும்பான்மை இனத்தின் மதச் சின்னங்கள், நடைமுறைகளை திணிக்கும் ஆட்சியாளர்களின் பரந்த நிகழ்ச்சி நிரல் குறித்து சிறுபான்மை சமூகத்தினிடையே சந்தேகங்களும் அச்சங்களும் காணப்படுகின்றன. இதன் காரணமாக போராட்டம் முன்னெடுக்கப்பட்டு இழப்புகள் ஏற்பட்டமையும் வரலாறாக உள்ளது.

குறிப்பாக, ஆக்கிரமிப்பு நிகழ்ச்சி நிரலுக்கு தொல்லியல்துறை ஒரு கருவியாக காணப்படுகின்றது. அதேநேரம் நீதிமன்றங்களும் அழுத்தங்களுக்கு உள்ளாகின்றன, தற்போதைய நிலையில் வெடுக் குநாறியில் இரவு நேரத்தில் பூசை வழிபாடுகளுக்கு அனுமதிக்கப்பட்டதா இல்லையா என்பது குறித்து முரண்பட்ட விளக்கங்கள் உள்ளன. எவ்வாறாயினும் வெடுக்கு நாறியில் பல ஆண்டுக ளாக முன்னெடுக்கப்படும் மதப்பழக் கவழக்கங்களுக்கு தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அதேநேரம், பொலிஸார் வெடுக்குநாறி தொல்பொருள் பகுதி என்பதால் அங்கு சேதங்கள் ஏற்படுத்தப்பட்டதாக கூறுகின்ற போதும் அந்த இடத்தில் சேதம் ஏற்பட்டதற்கான எந்த ஆதாரத்தையும்




காலைக்கதிர்
Kalaikkathir

# கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியின் ரமாழனில் ஒருநாள் தலைமைத்துவ



(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்லூரியின்வரலாற்றில்முதற்தடவையாக நோன்பு காலத்தில் ஆன்மிகம், ஒழுக்கம், தலைமைத்துவம், இஸ்லாமிய பண்பாடுகள் அடிப்படையில் மாணவிகளின் ஆளுமை விருத்தியை மேம்படுத்தும் நோக்கில் 'ரமாழனில்ஒருநாள்'எனும்தொனிப்பொருளில் ஒரு நாள் இஸ்லாமிய தலைமைத்துவப் பயிற்சி முகாம் உயர்தர கலை வர்த்தக பிரிவின்பகுதித்தலைவிஜ.எல்.எம்.எச். ஷம்சுல் ஹிதாயாதலைமையில்கல்லூரியின்ஸ்மாா்ட் வகுப்பறை மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில்பிரதமஅதிதியாககல்லூரியின் முதல்வர் ஏ.பி. நஸ்மியா சனூஸ், சிறப்பு விருந்தினராகஇக்கல்லூரியின்ஆசிரியையும் முன்னாள் பகுதித்தலைவியுமான றிப்கா அஸ்மி காரியாப்பர் கலந்து கொண்டனர்.

குறித்த நிகழ்வில் உயர்தரம், தரம் 11 மற்றும் விடுதி மாணவிகள் என 50 இற்கும் மேற்பட்டவர்கள்இஸ்லாமியதலைமைத்துவப் பயிற்சி முகாம் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

காலை 5 ஷபஹ் தொழுகையுடன் ஆரம்பமான நிகழ்வானது

இஸ்லாமிய தலைமத்துவப் பயிற்சி ஓர் அறிமுகம் என்ற தலைப்பில் ஜ.எல்.எம்.எச். ஷம்சுல் ஹிதாயா, அல் குர்ஆனின் ஒளியில் உயிரியல், பௌதீகவியல் மற்றும் இரசாயனவியல் தலைப்பில்

பற் சுகாதார வைத்திய நிபுநர் டாக்டர். எம்.ஆர்.எப். சுர்பா, பண்பட்ட சமூக உருவாக்கத்தில் கல்வியின் பங்களிப்பு மௌலவி. ஆசிரியர் ஏ. கலிலூல் றஹ்மான், சமநிலை ஆளுமை உயர்தர உயிரியல் பௌதீக விஞ்ஞான பிரிவு பகுதித்தலைவர் எஸ். இம்தியாஸ் ஆகியோரால் விரிவுரைகள் நிகழ்த்தப்பட்டன.

ஐவ்வேளைத் தொழுகை, ழுஹாத் தொழுகை, ஹிஸ்புல் குர்ஆன், கலை நிகழ்ச்சிகள், மாலை நேர துஆக்கள், ரமழான் கற்றுத்தரும் படிப்பினைகள் தொடர்பான மார்க்க சொற்பொழிவுகள் என பல்வேறுபட்ட இஸ்லாமிய நிகழ்வுகள் இடம் பெற்றன.

இறுதியாக இப்தார் நிகழ்வுகளுடன் பங்குபற்றியமாணவிகளுக்கானசான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதி அதிபர்களான ஹாஜியானி எஸ்.எஸ்.எம். சமதா மசூது லெவ்வை, ஏ.எச். நதீரா, உதவி அதிபர் என்.டி நதீகா, தரம் 11 பகுதி ஆசிரியர்கள், மாணவிகள் என பலரும் கலந்து கொண்டனர்.(05)



## வெடுக்குநாறி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களால் முன்வைக்க முடியவில்லை இதனால் கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றால் விடுவிக்கப்பட்டுள்ளதோடு வழிபாட்டுக்கான அனுமதியும் அளிக்கப்பட்டுள்ளமையானது நிம்மதி அளிப்பதாக உள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டர்க், கடந்த அமர்வில் முன்வைத்த வாய்மொழிமூலமானஅறிக்கையில், இலங்கையில் தொடர்ச்சியாக, கடத்தல்கள், சட்டவிரோதமாகத் தடுத்துவைத்தல், தடுத்து வைத்து சித்திரவதைசெய்யப்படுதல்உள்ளிட்ட விடயங்கள் இடம்பெறுவதாக சுட்டிக்காட்டியுள்ள நிலையில் வெடுக்குநாறிச்சம்பவம்அவருடைய கூற்றை உறுதிப்படுத்துவதாக உள்ளது.

இதேநேரம், இலங்கை அரசாங்கம் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக ஒரு புதிய அலுவலகத்தை அமைப்பது உட்பட, ஊக்குவிப்பு நிகழ்வுகள் சிலவற்றையும் ஆரம்பித்துள்ளன. அதேபோன்று இலங்கையிலுள்ள அனைத்து சமூகங்களுக்கிடையில் சமய நல்லிணக்கத்தையும் புரிந்துணர்வையும் மேம்படுத்துவதற்காகஎமதுஅமைப்புக்களாலும் முன்னெடுக்கும் முயற்சிகளுக்கு இவ்வாறான சம்பவங்கள் எதிர்மறையான பிரதிபலிப்புக்களை ஏற்படுத்துகின்றன. ஆகவே இவ்விதமான சம்பவங்கள் மீளவும் இடம்பெறாமையை அரச தரப்புக்கள் உறுதி செய்ய வேண்டும் என்றுள்ளது.

## பொறுப்புக்கூறலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்தோடு சுமார் 60,000 -முதல் 100,000 வரையான வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்கள் பதிவாகியிருக்கும் இலங்கை, உலகிலேயே அதிக எண்ணிக்கையான வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்கள் இடம்பெற்ற நாடுகளின் பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ளது.

இலங்கைஆளும்தரப்புக்கள்பல தசாப்தகாலமாக தீவிரவாதத்தைத் தோற்கடித்து, தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தல்என்றபோர்வையில் அரச பயங்கரவாதத்தை பயன்படுத்துவதற்கான ஆயுதமாக வலிந்து காணாமலாக்குவதைப் பயன்படுத்திவந்திருக்கின்றது.

1970 மற்றும் 1980களில் ஜனதா விமுக்திபெரமுன (மக்கள்விடுதலை முன்னணி) கிளர்ச்சி இடம்பெற்ற காலப்பகுதியில் தொடங்கிய வலிந்து காணாமலாக்கப்படல்கள், தமிழ் இளைஞர்கள் அரச படையினரால்கடத்தப்படல்போன்ற சம்பவங்கள் மூலம் உள்நாட்டு ஆயுதப்போராட்டத்தின்போது மேலும் தீவிரமடைந்தது.

இருப்பினும் 2009 இல் போர் முடிவுக்குக்கொண்டுவரப்பட்டதுடன் இவ்வலிந்து காணாமலாக்கப்படல்களும்இடைநிறுத்தப்பட்டன. ஆனால் போருக்குப் பின்னர் ஊடகவியலாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், சிறுபான்மையின சமூகங்களை இலக்குவைத்துஅரசஅனுசரணையுடன்கூடிய வெள்ளை வான் கடத்தல்கள் எனும் புதிய பாகம் தொடங்கியது.

வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பத்தினர் மத்தியில் மிக ஆழமான துயரமும், தமதுஅன்புக்குரியவர்களுக்குஎன்ன நேர்ந்தது என்ற பதில் தெரியாத கேள்வியும், தொடர் விரக்தியும் நிலைகொண்டிருக்கின்றது. உண்மை, நீதி மற்றும் இழப்பீட்டுக்கான அவர்களது தொடர் போராட்டம் அரச ஒடுக்கு முறைகளுக்கு உள்ளாகின்றது.

வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்கள் தொடர்பில் நீதியை நிலைநாட்டுமாறு தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டுவரும் நிலையில், அரசாங்கம் காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் மற்றும் இழப்பீட்டுக்கான அலுவலகம் போன்ற கட்டமைப்புக்களை ஸ்தாபித்திருக்கின்றதே தவிர, அர்த்தமுள்ள பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதற்கான முயற்சிகள் மிகவும்மந்தகரமானநிலையிலேயே உள்ளன.

அதன்படி இலங்கையைப் பொறுத்தமட்டில் வலிந்து காணாமலாக்கப்படல்கள் என்பது உடனடியாக பொறுப்புக்கூறல் நிலைநாட்டப்படவேண்டிய விடயமாக இருப்பதுடன், இவ்வாறான சம்பவங்கள் மீண்டும் நிகழாதிருப்பதை உறுதிப்படுத்தவேண்டியது அவசியமாகும் என்றுள்ளது.

# கல்முனை கடற்கரை பகுதிகளில் சுத்திகரிப்பு வேலைத் திட்டங்கள்




(அஸ்லம் எஸ். மௌலானா)

சர்வதேசகழிவுகளற்றதினத்தை முன்னிட்டு கல்முனை மாநகர சபைக்குட்பட்டகடற்கரைப்பகுதிகளில் நேற்று (சனிக்கிழமை) விசேட சுத்திகரிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மாநகரஆணையாளர்ஏ.எல்.எம். அஸ்மினின் பணிப்புரை மற்றும் அறிவுறுத்தல்களின் பிரகாரம் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம்னின் ஆலோசனை, வழிகாட்டலின் கீழ் மாநகர சபையின் சுகாதாரப் பிரிவு பொறுப்பு உத்தியோகத்தர் எம்.எம்.எம். பயாஸின் மேற்பார்வையில் திண்மக்கழிவகற்றல் பிரிவினரால் இச்சுத்திகரிப்புபணிகள் முன்னெடுக் கப்பட்டன.

இதன்போது மருதமுனை, பாண்டிருப்பு, கல்முனை மற்றும் சாய்ந்தமருது பிரதேசங்களில் உள்ள கடற்கரைப் பகுதிகளில் கழிவுகள் யாவும் அகற்றப்பட்டு தூய்மைப்படுத்தப்பட்டிருக்கின்றன.

றமழான் நோன்பு காலத்தில் மிகவும் அர்ப்பணிப்புடன் இப்பணிகளைசிறப்பாகமேற்கொண்ட அனைத்துஊழியர்களுக்கும்மாநகர ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸ்மி நன்றி தெரிவித்துள்ளார். (05)

# வாசல் கவிதை சஞ்சிகை திருமலையில் வெளியீடு!



(ஹஸ்பர் ஏ. எச்)

வாசல் வாசகர் வட்டத்தின் வெளியீடான வாசல் கவிதைத சஞ்சிகை வெளியீடு நேற்று(சனிக்கிழமை) திருகோணமலை நகராட்சி மன்ற பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வு, வாசல் வாசகர் வட்டத்தின் தலைவர்ஊடகவியலாளர் அரசரெத்தினம் அச்சுதனின் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு, பிரதமவிருந் தினராக திருகோணமலை மாவட்டஊடகவியலாளர் சங்கத்தின் தலைவர் பொன்.சற்சிவானந்தம் கலந்து கொண்டிருந்ததுடன், சிறப்பு விருந்தினர்களாக திருகோணமலை மாவட்டத்தின் மூத்த எழுத்தாளர்களான திருமலை சுந்தா, கவிஞர் ஷெல்லிதாசன், கவிமணி அம்.கௌரிதாசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில், தொடக்கவுரை மற்றும்நிகழ்ச்சி தொகுப்பை கவிஞர் க.யோகானந்தம் வழங்கியிருந்தார்.

பிரதம ஆசிரியர் உரையினை வாசல் கவிதை சஞ்சிகை யின் பிரதம ஆசிரியர் ஊடகவியலாளர் ச.திருச்செந்தூரன் ஆற்றியிருந்ததுடன், ஈழத்து கவிதை சிற்றிதழ்களின் வரிசையில் வாசல் சஞ்சிகை என்ற தலைப்பில் கவிஞர் தி.பவித்ரன்விசேடஉரையாற்றினார்.

இந்நிகழ்வில், திருகோணமலை மாவட்டத்தின் மூத்த எழுத்தாளர்களான திருமலை சுந்தா, கவிஞர் ஷெல்லிதாசன், கவிமணி அம்.கௌரிதாசன் ஆகியோர் 'கலைக்கேசரி' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# வலி. வடக்கில் ஆளில்லா வீடுகள் உடைக்கப்பட்டு திருட்டு அதிகரிப்பு

யாழ்ப்பாணம் வலி.வடக்கு பகுதியில் கடந்த 33 வருடங்களாக இராணுவ முகாம் அமைக்கப்பட்டிருந்த தனியாரின் காணிகள் அண்மையில் காணி உரிமையாளர்களிடம் மீள கையளிக்கப்பட்டன.

பெரும்பாலான காணி உரிமையாளர்கள் வெளி பிரதேசங்கள் மற்றும் வெளிநாடுகளில் வசித்து வருவதால் அவர்களால் உடனேயே அக்காணிகளுக்குள் குடியமர முடியவில்லை. அதனை தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டுள்ள திருடர்கள், அந்த காணிகளுக்குள் புகுந்து வீடுகளை உடைத்து இரும்புகள், கதவுகள், கதவு நிலைகள் என்பவற்றை களவாடி செல்கின்றனர்.

இது தொடர்பில் பாதுகாப்பு தரப்பு மற்றும் பொலிஸாரிடம் அறிவித்தும் திருடர்களைக் கட்டுப்படுத்த எந்த நடவடிக்கையும் இல்லை என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (05)





# ஈழத்தமிழர் சுயநிர்ணய உரிமையை அமெரிக்கா ஆதரிக்க வேண்டுமாம்

## அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் அன்டனி பிளிங்கெனிற்கு கடிதம்



இலங்கையில் ஐ.நாவின் உண்மை மற்றும் நல்லிணக்க முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்துள்ளன என தெரிவித்துள்ள அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள், அமெரிக்கா ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை ஆதரிக்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்டனி பிளிங்கெனிற்கு எழுதியுள்ள கடிதத்தில் அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் டொனால்ட் ஜி டேவிஸ், வைலிநிக்கலஸ் ஜோன்கொதைமர், ஜெப்ஜக்சன் சமர்லீ டானி கே, டேவிஸ் சூசன், வைல்ட் ராஜாகிருஸ்ணமூர்த்தி, ஜமால்போமன், கேப்வாஸ்குவாஸ் ஆகியோர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

அவர்கள் தங்கள் கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

இலங்கையில் ஐ.நாவின் உண்மை மற்றும் நல்லிணக்க முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்துள்ளன எனத் தெரிவித்துள்ள அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள், அமெரிக்கா ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை ஆதரிக்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அவர்கள் தங்கள் கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

1. ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை ஆதரித்து மற்றும் சர்வதேச சட்டங்களின்படி அவர்களுக்குள்ள உரிமைகளின் அடிப்படையில், பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, உலகளாவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஜனநாயக வழிமுறையான பொதுவாக்கெடுப்புமுறையை ஆதரிக்கவும்.

2. ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகரின் பரிந்துரைகளைப் பின்பற்றி, போரின் போது பொதுமக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு விரிவான சர்வதேச விசாரணைகள் மற்றும் பொறுப்புக்கூறலை ஆதரிக்கவும். அத்தகைய விசாரணையில் இனப்படுகொலை செய்யப்பட்டதா என்பது பற்றிய ஆராய்வதும் அடங்கும்.

3. சுயாதீனமான நீதித்துறை நடவடிக்கைகளை ஊக்குவிக்கவும், சாத்தியமான குற்றச்சாட்டுகளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு விசாரணைகளுக்காகப் பரிந்துரைக்கவும் அமெரிக்காவிற்கு ஐக்கிய நாடுகள் சபையில் - பொதுச் சபை , பாதுகாப்பு கவுன்சில் மற்றும் மனித உரிமைகள் கவுன்சில் உட்பட- உள்ள தலைமைப் பாத்திரத்தை வாய்ப்பாகப் பயன்படுத்தவும். - என்றுள்ளது.

(05)

# நீர்வழுங்கல் வடிகாலமைப்புச் சபையால் உலக நீர் தினத்தை முன்னிட்டு நிகழ்வு



(ஹஸ்பர் ஏ.எச்)

சர்வதேச நீர் தினமான மார்ச் 22 இனை முன்னிட்டு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் கந்தளாய் காரியாலயம் ஏற்பாடு செய்த மரநடுகை மற்றும் புதிய பிரதான குழாய் நீர் பொருத்தும் நிகழ்வு வியாழக்கிழமை இடம் பெற்றது.

மேற்படி நிகழ்வில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அதுகோரள பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு மரநடுகையை ஆரம்பித்து வைத்ததுடன் பேரமடுவ பகுதியில் பிரதான நீர் குழாயும் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இதில் பாடசாலை மாணவிகள் கலந்துகொண்டு மரநடுகையில் ஈடுபட்டதுடன் மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாராச்சி மற்றும் நீர் வழுங்கல் சபையின் பிரதி பொது முகாமையாளர், திருகோணமலை பிராந்திய முகாமையாளர்,சமூகவியலாளர் ,பொறியியலாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

(05)

# நிந்தவூர் வைத்தியசாலையில் வருடாந்த இப்தார் நிகழ்வு

(நூருல் ஹுதா உமர்)

நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் வருடாந்த இப்தார் நிகழ்வு வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எம்.பீ. அப்துல் வாஜித் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் உத்தியோகத்தர்கள், வைத்தியசாலையின் அனைத்து உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் அம்பாறை பொது வைத்தியசாலையின் சிறுநீரக பிரிவு வைத்திய உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

சிறப்பு அதிதியாக கலந்துகொண்ட நிந்தவூர் காஷிபுல் உலூம் அரபுக் கல்லூரியின் அதிபர் மௌலவி ஸம்சுதீன் (ஹாமி) அவர்களால் மார்க்க உபன்னியாசம் நிகழ்த்தப்பட்டது.(05)



காலைக்கதிர் Kalaikkathir

# யாழ். போதனா வைத்தியசாலையில் இனி மாலை 6 மணி வரையும் சேவை

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவு மாலை ஆறு மணி வரை செயற்படும் என யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் தங்கமுத்து சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

வெள்ளிக்கிழமை மாலை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற வைத்தியசாலையின் அபிவிருத்தி குழு தீர்மானங்களை அறிவித்து கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வெளி மாவட்டங்களில் இருந்து வெளிநோயாளர் பிரிவில் அதிகளவில் சிகிச்சை பெறுவதற்கு வருகிறார்கள்.

அதன் காரணமாக வெளி நோயாளர் பிரிவை போயா தவிர்ந்த கிழமை நாள்களில் மாலை 6 மணி வரை செயற்படுத்துவதற்கு தீர்மானித்துள்ளோம்.

வைத்தியசாலையின் செயற்பாடுகளை விஸ்தரிப்பதற்கு இட வசதி மற்றும் ஆளணி எமக்குள்ள ஒரு பாரிய சவாலாக விளங்குகிறது. இருந்த போதும் எம்மிடம் காணப்படுகின்ற வளங்களை உரிய முறையில் பயன்படுத்தி சேவையாற்றி வருகிறோம்.

எமது தேவைப்பாடுகள் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் எடுத்துரைத்துள்ளோம் அவர் எமது தேவைகளை நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கை இருக்கிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

குறித்த கூட்டத்திற்கு யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் அபிவிருத்தி குழு தலைவர் வாழ்நாள் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம் பிள்ளை, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் யமுனானந்தா, வைத்தியசாலை கணக்காளர் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

(05)

# வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கிளிநொச்சியில் போராட்டம்



கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை நேற்று (சனிக்கிழமை) முன்னெடுத்திருந்தனர்.

கிளிநொச்சியில் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு நேற்று 2594 நாள்கள் நிறைவடைகின்ற நிலையில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி ஏ -9 வீதியில் ஆனந்தபுரத்திலுள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் அலுவலகத்திற்கு முன்பாக குறித்த கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. பதாகைகளையும் தமது காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளின் படங்களையும் ஏந்தியவாறு குறித்த கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். அரை மணித்தியாலங்கள் வரை குறித்த கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கடந்த ஏழு வருட காலமாக இராணுவத்தினரிடம் ஒப்படைத்த தமது உறவுகளை மீட்டுத்தர வலியுறுத்தி போராடிவரும் நிலையில் இதுவரையில் எவராலும் எந்தத் தீர்வும் பெற்றுத்தரப்படவில்லை.

இதனை வலியுறுத்தி கடந்த 12 ஆம் மனித உரிமை பேரவையில் நடைபெற்ற இலங்கை தொடர்பான விவாதத்திலும் தாம் தமது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் நிலைமைகள் தொடர்பாக 08 மாவட்டங்களில் சேர்ந்த உறுப்பினர்கள் மனித உரிமை பேரவையிலும் தமக்கான உரிய தீர்வை பெற்றுத் தர வேண்டுமென வலியுறுத்தி கலந்துகொண்டனர் எனவும் தெரிவித்தனர்.

தற்பொழுது வயது முதிர்ந்த முடியாத நிலையிலும் இறுதி காலத்திலாவது தமது உறவுகளை ஒரு முறை பார்க்க வேண்டுமென ஆவலாக உள்ளதாகவும் தெரிவித்தனர். (05-113)

# மயிலிட்டி துறைமுகத்துக்கு அமைச்சர் டக்ளஸ் வருகை





மயிலிட்டி துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் இழுவைப் படகுகளால் துறைமுகத்தில் கடற்றொழிலாளர்கள் படகுகளை கரைசேர்ப்பது மற்றும் எரிபொருள் நிரப்புவது போன்ற செயற்பாடுகள் பாதிக்கப்பட்டு வருவதாகவும் அதற்கு நிரந்தர தீர்வை பெற்றுத்தருமாறும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் குறித்த பகுதி கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த துறைமுகத்தில் தொடர்ந்துவரும் இவ்வாறான பிரச்சினைகள் தொடர்பில் அமைச்சரின் பார்வைக்கு கொண்டுவரப்பட்டிருந்த நிலையில் நேற்று (சனிக்கிழமை) மயிலிட்டி இறங்குதுறைப் பகுதிக்கு வந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நிலைமைகளை ஆராய்ந்துகொண்டார்.

மேலும், மயிலிட்டி இறங்குதுறை பகுதியில் அதிகளவான நீண்டநாள் தொழில் மேற்கொள்ளும் ட்ரோலர் படகுகளும் மீன்பிடி படகுகளும் தரித்து நிற்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. அதனால் அவை நாளாந்தம் தொழில் நடவடிக்கைகளை மேற்கொளும் படகுகள் எரிபொருள் நிரப்புவதிலும் படகுககளை கரை சேர்ப்பதிலும் பல அசௌகரியங்களை ஏற்படுத்தி வருகின்றன.

இவ்வாறான பிரச்சினைகள் தொடர்ந்துவருவதால் அவற்றை ஒழுங்கபடுத்தி கடற்றொழில் நடவடிக்கைகளுக்கு இறங்குதுறையின் செயற்பாடுகளை இலகுபடுத்தி தருமாறு கடற்றொழிலாளர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன்,மயிலிட்டி துறைமுகத்தில் சட்டவிரோதமாக இலங்கை எல்லைக்கள் நுழைந்த குற்றச்சாட்டில் கடற்படையினரால் பிடிக்கப்பட்டு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் இந்திய இழுவைப் படகுகளாலும் துறைமுகத்தின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டு வருகின்றன எனவும் சுட்டிக்காட்டியிருந்தனர்.

நிலைமைகளை அவதானித்த அமைச்சர், அவ்வாறு தரித்து நிறுத்தப்பட்ட படகுகளை ஆழமான பகுதியில் நிறுத்தி வைப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறும் குறிப்பாக தொழில் மற்றும் எதிபொருள் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வருகைதரும் படகுகளுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தாத வகையில் பொறிமுறையை வகுத்து தீர்வுகளை காணுமாறும் துறைசார் அதிகாரிகளுக்கு பணித்துள்ளார்.

இதேவேளை தடைசெய்யப்பட்ட சுருக்குவலை தொழில் நடவடிக்கைகளும் இப்பகுதியில் அதிகரித்து வருவதாகவும் அவற்றையும் கட்டுப்படுத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அமைச்சரிடம் கடற்றொழிலாளர்கள் கோரியிருந்தனர். இவ்விடயம் தொடர்பிலும் அதிக கவனம் செலுத்திய அமைச்சர், அவ்வாறான தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அனுமதிக்கக் கூடாதெனவும் அவ்வாறு செயற்படும் தரப்பினரைத் தடுப்பதுடன் அவர்களைச் சட்டத்தின் முன்நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறும் உரிய தரப்பினருக்கு உத்திவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# கிளிநொச்சி பொது சந்தையில் தண்ணீர் வசதி சீராக இல்லை

## துன்பப்படும் வணிகர்கள்

கிளிநொச்சி மாவட்ட கரைச்சி பிரதேச சபைக்குப்பட்ட கிளிநொச்சி பொது சந்தையில் நீண்ட காலமாக நீர் வசதிகள் சீராக கிடைக்கப்பெறாமையின் காரணமாக வர்த்தகர்கள் மற்றும் நுகர்வோர்கள் எனப் பலரும் பாதிக்கப்பட்டுள்ளனர் எனக் கவலை விடுத்துள்ளனர்.

கரைச்சி பிரதேச சபைக்குப்பட்ட பொது சந்தையில் நீண்ட நாள்களாக நீர் வசதியின்மை காரணமாக பெரிதளவில் தாம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தமது வணிகத்திற்கு வருகை தரும் நுகர்வோரின் எண்ணிக்கையும் வீழ்ச்சி அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

மேலும் கிளிநொச்சி சந்தைப்பகுதியில் உள்ள பொது மலசல கூடம் தூய்மையின்றி காணப்படுவதாகவும் இது தொடர்பாக பல தடவைகள் கரைச்சி பிரதேச சபைக்கு தெரிவித்தும் இதுவரையில் எந்தவொரு நடவடிக்கைகளும் மேற்கொள்ளவில்லை எனவும் சந்தை வளாக வடிகாலவாய்க்கால்களும் நீண்ட நாள்களாக துப்புரவு செய்யப்படாமைவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் பெரிதளவில் சிக்கல்களை எதிர்கொள்வதாகவும் நோய்வாய்பட அதிக சாத்தியங்கள் உள்தாகவும் உடனடியாக விரைந்து தமக்கான நீர் வசதியையும் துப்புரவு பணியையும் மேற்கொள்ளுமாறு கிளிநொச்சி பொதுச்சந்தை வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் மேலும் தெரிவிக்கையில் -

சந்தை பகுதிக்குள் அமைந்துள்ள மலசலகூடம் அற்றும் மீன் விற்பனை செய்யப்படும் பகுதிகளில் உள் செல்ல முடியாதவாறு துர்நாற்றம் விசுவதாகவும் தண்ணீரின்மையால் பெரிதும் சிரமப்படுவதாகும் நாளாந்த ஜீவனோபாயத்தை பெறுவதற்காகவே இது அனைத்தையும் சகித்துக் கொண்டு இப்பகுதியில் பணிபுரிவதாகவும் தெரிவித்துள்ளனர்.

(05 - 113)

காலைக்கதிர் Kalaikkathir

# சுவாமி விபுலானந்தரின் சிலை சிட்னியில் திறப்பு




உலகின் முதல் தமிழ் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் திருவுருவச்சிலை நேற்று (வெள்ளிக்கிழமை) ஆஸ்திரேலியா சிட்னி மாநகரில் திறந்துவைக்கப்படவுள்ளது.

சிட்னி நேரப்படி மாலை 4 மணியளவிலும், இலங்கை நேரப்படி காலை 10 மணியளவிலும் இந்தத் திறப்பு விழா இடம்பெற்றது.

சிட்னியில் வாழும் காரைதீவைச் சேர்ந்த 'உதயசூரியன்' மாணவர் உதவி மையத்தின் தலைவரும், 'உதயசூரியன்' பத்திரிகையின் நிர்வாக ஆசிரியருமான பிரபல பரோபகாரி நாகமணி குணரெத்தினம் 'கிழக்கு உதயசூரியன்' முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாருக்கு இந்த சிலையை நிறுவுகிறார்.

சுவாமிகள் பிறந்த இலங்கை திருநாட்டிற்கு வெளியே முதல் தடவையாக கடல் கடந்த நாடுகளில் சுவாமிகளின் திருவுருவச் சிலை நிறுவும் முதல் வரலாற்று நிகழ்வு இதுவாகும்.

இச்சிலை திறப்புவிழாவிற்கு உலகநாடுகளிலிருந்து குறிப்பாக இந்தியா, லண்டன், கனடா, சிங்கப்பூர், மலேசியா, பிரான்ஸ், இலங்கை போன்ற நாடுகளிலிருந்து பல பேராளர்கள் சிட்னிக்கு வருகைதந்திருந்தனர்.

'சிட்னியில் அடிகளார் படிவமலர் 'எனும் சிறப்பு நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

(05)

# குடும்பத்தவர்களுடன் முரண்பட்டு தனியாக வசித்து வந்தவர் சாவு

## யாழ்ப்பாணத்தில் சம்பவம்!



இளவாலை - வசந்தபுரம் பகுதியில் தனியாக வசித்து வந்து குடும்பஸ்தர் வெற்றுக் காணியில் இருந்து வெள்ளிக்கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இதன்போது புதிய கொலனி, கீரிமலை பகுதியைச் சேர்ந்த ஐயங்கன் சிவானந்தராஜா (வயது 47) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில் -

குறித்த நபர், அவரது குடும்பத்தவர்களுடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக இரண்டு மாதங்களுக்கு முன்னர் அவர்களைப் பிரிந்து வந்து இளவாலை - வசந்தபுரம் பகுதியில் உள்ள காணியில் குடிசை ஒன்றை அமைத்து தனியாக வசித்து வந்துள்ளார்.

இந்நிலையில் அவர் வெள்ளிக்கிழமை, அவரது குடிசைக்கு அருகில் உள்ள வெற்றுக் காணி ஒன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

இவ்வாறு மீட்கப்பட்டவரது சடலம் மீது மேற்கொள்ளப்பட்ட பிரேதப் பரிசோதனைகளின் அடிப்படையில் அவர் அதிக மதுப் பாவனை காரணமாக நுரையீரல் பாதிக்கப்பட்டு உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரணவிசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (05)

# தொண்டர் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு வழங்கி வைப்பு



(ஹஸ்பர் ஏ. எச்)

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பின்தங்கிய தமிழ் பிரதேசங்களில் அமைந்துள்ள பல பாடசாலைகளில் கணினி, கணிதம், அறிவியல் மற்றும் ஆங்கிலம் கற்பிக்க ஆசிரியர் இல்லாத சூழல் நிலவுகின்றது.

அந்தவகையில் வெருகல் கோட்டத்தில் உள்ள இலங்கைத்துறை முகத்துவாரம் இந்துக் கல்லூரி, திருவள்ளுவர் வித்தியாலயம் மற்றும் துவாரகா வித்தியாலயம் மூதூர் வலையத்தில் உள்ள கங்குவேலி அகத்தியர் வித்தியாலயம், இலிங்கபுரம் தமிழ் வித்தியாலயம் மற்றும் ஆதியம்மன் கேணி தமிழ் வித்தியாலயம் மொறவெள கோட்டத்தில் உள்ள அவ்வை நகர் தமிழ் வித்தியாலயம் குச்சவெளிக் கோட்டத்தில் உள்ள திரியாய்த் தமிழ் மகாவித்தியாலயம் மற்றும் விவேகானந்தா மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு கணிதம், கணினி மற்றும் அறிவியல் கற்பிக்க ஆசிரியர் இல்லை.

தமிழ் மாணவரது கல்வி பாதிக்கப்படக்கூடாது என்பதற்காகக் கல்வித் துறையின் வேண்டுகோளுக்கமைய திருக்கோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கம் மேற்படி பாடசாலைகளுக்குத் தொண்டர் ஆசிரியர்களை நியமித்து மாதந்தோறும் மதிப்பூதியம் வழங்கி வருகின்றது.

2024 கல்வி ஆண்டுக்கான பங்குனிமாதக் கொடுப்பனவு நேற்று (சனிக்கிழமை) வழங்கப்பட்டது. திருக்கோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவர் கதிர்வேலு சண்முகம் குகதாசன், கனடா திருக்கோணமலை நலன்புரிச் சங்கத் தலைவர் தங்கவடிவேல் ரகுநாதன், அதன் நிர்வாக உறுப்பினர் க. இலங்கேஷ்வரன் ஆகியோர் இக்கொடுப்பனவுகளை வழங்கினர்

.(05)

# சாய்ந்தமருது உணவகங்களில் திடீர் சோதனை: பாவனைக்கு பொருத்தமற்ற உணவுகள் அழிப்பு



(நூருல் ஹுதா உமர்)

உணவுப்பாதுகாப்பு மற்றும் சுத்தமான உணவை பொதுமக்களுக்கு உறுதிப்படுத்தல் என்ற நோக்கில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சஹீலா இஸ்ஸதீனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஜே. கே.எம். அர்சத் காரியப்பர் தலைமையில் சாய்ந்தமருது பிரதேச உணவு தயாரிக்கும், விற்பனை செய்யும், விநியோகம் செய்யும் உணவு நிலையங்கள் நேற்று (சனிக்கிழமை) திடீர் பரிசோதனையும், முற்றுகையும் இடம்பெற்றன.

உணவங்கள் சுத்தமில்லாது இருத்தல், உணவு கையாளுகையில் முறையான ஒழுங்கீனமின்மை, நீண்ட நாள்களுக்கு பொருத்தமில்லாதவாறு உணவுகளை குளிர்சாதனப்பெட்டிகளில் தேக்கி வைத்தல், சமையல் பாத்திரங்கள் மற்றும் சமையல் பொருள்களின் தரம் போன்றன சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய அதிகாரிகளால் இந்த கள பரிசோதனையில் பரிசோதிக்கப்பட்டது. மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற மற்றும் பழுதடந்த உணவுகளை வைத்திருந்தோர் மீது எச்சரிக்கை விடுக்கப்பட்டுடன் மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற மற்றும் பழுதடைந்த உணவுகள் கடை உரிமையாளர்களை கொண்டே அழிக்கப்பட்டன.

இந்த கள விஜயத்தில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய உத்தியோகத்தர் எம்.ஜே. புஹாது உட்பட பலரும் ஈட்டுபட்டனர்.(05)

# ஆபத்தான மருத்துவக் கழிவுகள் எரியூட்டி கோம்பையன்மணல் மயானத்தில் திறப்பு



யாழ்ப்பாணம் கோம்பையன்மணல் இந்து மயானத்தில் அமைக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கான எரியூட்டியை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று (வெள்ளிக்கிழமை) நாடாவை வெட்டி உத்தியோகபூர்வமாக திறந்துவைத்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் மருத்துவ கழிவுகளை எரியூட்டுவதற்காக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 40 மில்லியன் ஷரூபா நிதி ஒதுக்கீட்டில் இந்த எரியூட்டி கொள்முதல் செய்யப்பட்டது.

முன்பு வைத்தியசாலை மருத்துவ கழிவுகளை எரியூட்டுவதில் பல்வேறு சர்ச்சைகள் எழுந்த நிலையில், எரியூட்டியை அமைப்பதற்கான இடத்தை தெரிவுசெய்வதில் கடும் இழுபறி ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில், யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தீர்மானத்துக்கமைய யாழ்ப்பாண மாநகர சபை, கோம்பயன்மணல் மயான சபை என்பவற்றின் அனுமதியுடன் இந்த எரியூட்டி கோம்பையன்மணல் இந்து மயானத்தில் நிர்மாணிக்கப்பட்ட நிலையில் நேற்று திறந்துவைக்கப்பட்டது.

(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.03.2024இல் வெளியிடப்பெற்றது